Free Circulation Germany- England

மணி: 72 - ஓசை: 311 ஆவணி. August. 2022

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

28TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch

Textilien &

Schmuck

32 ஆவது ஆண்டு நிறைவு

தரமும், மலிவும், ஒரே இடத்தில்



Königswall 16 (Am Hbf) 44137 Dortmund

Tel:0231 162377

# போராட்டக்காரர்களை எதிர்கொள்ள ரணில் கையாளப்போகும் உபாயம்?



நாவலப்பிட்டியில் வெற்றிமணி 1950 இல் பதித்த அச்சகத்தில், கால் பதித்த வேளை! 22.07.2022



கிளிநொச்சி உருத்திரபுரம் கிராம மக்களுக்கான குடிநீர்ச் சேவை!

Dr.IN

போதைப் பிரியர்களுக்கான மாற்று வழி என்ன?

சேவலும் கட்டெறும்பும்







# சேவலும் கட்டெறும்பும்



மாதவி

எரிபொருள் தட்டுப்பாடு, யாழ்ப்பாணம் சென்று இறைச்சிகள் வாங்க, வசதி குறைவு, அப்படி மினிவான்களில் சென்று வாங்கி வீடுவந்துசேர இறைச்சி கருவாடாகிவிடும்.

முன்னர் 1980 களில் வீட்டுக்கு விருந்தினர் வந்தால் தாம் வளர்த்த கோழியை, அடிக்க மனம்வராது, அதனால் பக்கத்து வீட்டு கோழியை அவர்களிடம் வேண்டி அடிப்பார்கள், பின் பக்கத்து வீட்டுக்கு விருந்தினர் வந்தால் அவர்களுக்கு நம்ம வீட்டுக்கோழி விருந்தாகும்.

இப்போ அதே நிலைதான் யாழ்ப்பாணத்திலும், காலை பக்கத்து வீட்டில், சேவல் பிடித்து வந்தாச்சு. கோழி வெட்ட, வீடு கூட்ட, கடைக்கு போக, இப்படி பல வேலைக்கு உதவிக்கு கைக்குள் ஒருவர் வீட்டில் நிற்பார். (வெளிநாடுகளில் கணவன், மனைவி செய்யும் வேலை.)

கோழி வெட்ட கத்தி தீட்டுகிறார், இலகுவாக வெட்ட கத்தி கூராக வேண்டும் என்பதால்.

நான் மாமிசம் உண்பதில்லை, ஆனால் எவரையும் உண்ணவேண்டாம் என்று தடுப்பதோ , போதனைகள் செய்வதோ இல்லை.

நான் கோழி வெட்டுவது பார்க்காமல் கிணற்றடிக்கு குளிக்கப்போட்டேன். குளித்துக்கொண்டும் ஒரு காது கோழி கத்துவது கேட்கிறதா என ஏங்குகிறது.

குளித்து முடிந்து தோளை துவாய்யால் துடைக்க, கோழி சத்தம் போட்டது. அந்த நேரம் பார்த்து துவாயில் இருந்த ஒரு கட்டெறும்பு, முதுகில் நல்ல கடி.

துவாய்யால் முதுகை மத்தால் கடைவதுபோல் கடைகையில், கட்டெறும்பு , கரைசலாகிப்போச்சு.

கோழியின் உயிரும் கட்டெறும்பின், உயிரும் ஒரே நேரம்தான் கைலாசம் சென்று இருக்கவேண்டும்.

கோழியைக் கொன்றவர்கள் கோழி சாப்பிடுகிறார்கள், எப்படி என்றாலும் ஊர்க்கோழி கோழி தான் என்று சொல்வதும் கேட்கிறது. கட்டெறும்பைக் கொன்றவன், நான், எதனை சாப்பிடுவது.

யானையின், உயிரும் ஒன்று தான், கட்டெறும்பின் உயிரும் ஒன்றுதான்.

இந்த இடத்தில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. புரிந்தால் நானும் ஞானியாகிவிடுவேனோ?



புதுக்குடியிருப்பு, 2009 ஆண்டு பல ஆயிரம் தமிழர்கள் யுத்தத்தில் இறந்த மண். அக் கிராமத்தில் சமூகப் பணி புரியும், இவள் பெயர் நிலா.

## நிலா! நில்லாமல் பணிபுரியும் முழு நிலா!

தோகை மயில்
வேலைப் பழுவால்
தோகை காய்ந்து
தோகை சருகானாலும்
தொண்டு உள்ளம்
நிறைந்த முகம்
மலர்ந்தே ஆடும்.

உதவி கேட்போர்க்
எல்லாம் ஓம் ஓம் எனும்
ஒய்யார மயிலே!
ஓயாது உன்பணி தொடர
வெற்றிமணி வாழ்த்துகள் .


நிலாமகள் (யேர்மனி)





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 311



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# போராட்டக்காரர்களை எதிர்கொள்ள ரணில் கையாளப்போகும் உபாயம்?

இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை பதவியேற்றுள்ளார். 2020 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்து - ஐ.தே.கவுக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் எம்.பி. பதவி மூலம் பாராளுமன்றத்துக்கு வந்து, பிரதமர் பதவியைப் பெற்று இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

பதவியேற்ற மறுதினமே காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அதிகாலையில் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. தான் பதவிக்கு வருவதற்கு காரணமாக இருந்த கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் இப்போது ரணிலுக்குத் தொல்லையாகி விட்டனர். போராட்டகாரர்களைக் கையாள்வதற்கு ரணில் கையாண்ட நடைமுறை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலத்த கண்டனங்களைப் பெற்றிருக்கின்றது. இவ்விடயத்தில் ரணில் சற்று நிதானமாகச் செயற்டபட்டிருக்க முடியும்.

## தொடர் தோல்விகளின் பின்...

தொடர்ச்சியான தோல்விகளால் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் இருப்பதில் கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்தவர் ரணில். தலைமைப் பதவி காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச தலைமையிலான அணி பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியையும் அமைத்தது. எதிர்க்கட்சியாகவும் இருக்கிறது. சஜித்தின் பிளவுதான் கடந்த பொதுத் தேர்தலில் ரணிலுக்கு கிடைத்த பெரும் தோல்விக்கு பிரதான காரணம்.

கட்சிக்கு எந்தவொரு ஆசனமும் கிடைக்காத நிலையில் - தேசியப்பட்டியல் மூலமாக கிடைத்த ஒரேயொரு ஆசனத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றம் வந்த ரணில் இன்று ஜனாதிபதியாகியிருக்கின்றார். அரசியல் என்பது வாய்ப்புக்களை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதுதான். இனிமேல் ரணிலுக்கு அரசியலில் இடமிருக்கப்போவதில்லை என அனைவருமே நம்பியிருந்த ஒரு நிலையில், சந்தர்ப்பங்களை மதிநுட்பத்துடன் பயன்படுத்தி அரசியலின் உச்ச பதவிக்கு வந்திருக்கின்றார் ரணில்.

ரணிலின் வீழ்ச்சிக்கு சஜித் பிரேமதாச எந்தளவுக்கு காரணமாக இருந்தாரோ அதேபோல அவரது தற்போதைய எழுச்சிக்கும் சஜித்தான் காரணம். மகிந்த ராஜபக்ச மே 9 ஆம் திகதி பிரதமர் பதவியைத் துறந்த போது, அந்தப் பதவியைப் பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சஜித் பிரேமதாசவைத்தான் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய முதலில் அழைத்தார். ஆனால், நாடு என்றுமில்லாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுப்பது தனது அரசியல் எதிர்காலத்துக்கு சவாலாகிவிடலாம் என்பதால் அவர் அதனை மறுத்தார். கிடைத்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் உபாயம் சஜித்துக்கு தெரிந்திருக்கவில்லை.



## ரணிலின் எதிர்பாராத வெற்றி

அதனையடுத்தே ரணிலின் பக்கம் கோட்டாபயவின் கவனம் திரும்பியது. அதனைவிட, தற்போது ரணில் ஜனாதிபதியாக வந்திருப்பதற்கும் சஜித்தின் தயக்கமே காரணம். தான் போட்டியிடுவதை இறுதி நேரத்தில் தவிர்த்து டல்லஸ் அழகப்பெருமவை களமிறக்கியதன் மூலம் - அவரது கட்சியினரே இறுதி வேளையில் அவரை ஆதரிக்க தயங்கினார்கள். சஜித்தின் ஆதரவாளர்கள் சுமார் 14 பேர் ரணிலுக்கு வாக்களித்ததாகச் சொல்லப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஜனாதிபதிப் பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். டலஸ் அழகப்பெருமவுக்கு 82 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் அளிக்கப்பட்டன. நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு எம்.பிக்கள் வாக்களிப்பை புறக்கணித்தனர்.

ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார் என்பது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது என்ற போதிலும், இந்தளவு பெரும்பான்மை அவருக்கு கிடைக்கும் என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்றுதான். பெரும்பாலான சிறுபான்மையினக் கட்சிகளும், ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன டல்லஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதென முடிவெடுத்திருந்த போதிலும் அந்தக் கட்சிகளின் பல உறுப்பினர்கள், கட்சித் தலைமையின் முடிவை மீறி ரணிலுக்கு வாக்களித்தமையால்தான் இந்தளவு அதிகளவு வாக்குகளை அவரால் பெறமுடிந்தது. இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று

15 ஆம் பக்கம் பார்க்க...



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main



# ஒரு பேருந்தில் பேசிய அரசியலும் அலசலும்!

மாதவி

வட்டுக்கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் காலை 10.30 மணிக்கு கண்ட இடத்தில் கையை நீட்டி பேரூந்தை மறித்து பேரூந்தில் ஏறினேன்.

இனி பேரூந்தை பஸ் என்றே சொல்லுறேன் வாசிப்பவர்களுக்கு, கொஞ்சம் அருகில் நிற்பதுபோல் இருக்கும் என்பதால்.



10.30 மணிக்கு பஸ் வந்தது என்றதும், யாழ்பாணத்தில் நேரத்திற்கு சரியாக பஸ் வருகிறது என்று தாறுமாறாக கற்பனை பண்ணவேண்டாம். ஏதோ நான் ஏறின நேரம் அதுதான்.

ஏறும் பொழுது, நான்கு இருக்கை (சீட்) மட்டுமே காலியாக இருந்தது.

அடுத்து பஸ் நிறுத்தியதும், நிரம்பிவிட்டது. சரி இனி இழுத்துக்கொண்டு ஓடுவான் என்று ஒரு நப்பாசை. அது சில நொடியில் நொருங்கிவிட, உள்ளிருக்கும் சனத்தின் அளவு வெளியில் ஏறுவதற்குக் காத்து நிற்கிறார்கள்,

நான் பின்னுக்கு இடம் இருக்கா எனத் திரும்பி பார்க்க, என் பக்கத்தில் இருந்த இளைஞன் எவ்வளவு பேர் எறினாலும் பஸ் கொள்ளும், எவரையும் ஏற்றாமல் போகமாட்டினம் என்றான்.

தம்பி வழமையாக இப்படித்தான் சனமோ என்றேன். எனக்கு தெரியாது! நானும் இப்ப இந்த எரிபொருள் இல்லா தபடியால் தான் ஏறினேன், இல்லை என்றால் மோட்டார் சைக்கிள் தான்.

பஸ் இருக்கை எல்லாம் நிறைந்து, நிற்கும் பகுதியும் நிறைந்து படியும் நிறைந்து இருப்பவர்கள் மடி மட்டும்தான், வெறுமையாக இருந்தது.

அடுத்த தரப்பிலும் பஸ் நிற்க யாரோ இறங்குகிறார்கள் என நினைக்க எனது யன்னலை ஒருவர் வந்து திறந்தார்.



பின்னுக்கு போங்கோ என்றார். அக்கா உந்தபையை இடிக்காமல் ஐயாவிடம், கொடுங்கோ சனம் பின்னுக்கு போக முன்னுக்கு பத்துபேர் ஏற, என் மடி கனத்தது.

பக்கத்தில் இருந்த தம்பி, கதைக்கத் தொடங்கினார், வெளிநாட்டு காசு இங்கை இருக்கு, இருந்தாலும், எரிபொருள் கிடைக்காதபடியால் தான் இந்தக்கூட்டம். இல்லை என்றால் பாண்வேண்டவும் ஓட்டோ தான்.



ரணில் பிரதமராக வந்ததும் இன்னும் எரிபொருள் கிடைக்காமல் பண்ணி பிரச்சினையை எரியவிட்டார்.

கோத்தாவை விரட்ட மக்கள் நடுத் தெருவுக்கு வந்தால்தான் முடியும் என்று நரிக்கு, அதுதான் ரணிலுக்கு தெரியும், இப்ப அவர் ஜனாதிபதி ஆகப்போகிறார். போகிறார் என்ன அவரேதான் இனி எல்லாம். பாவம் மனுஷன் முப்பது வருடக்கனவு, ஒருக்கா இருந்திட்டு போகட்டும் என்றார்.

பின் சீட்டில் இருந்தவர் எட்டி காதோடு தம்பி சொல்வது சரி, ஆனால் அவர் இந்த 2 வருடங்கள் மட்டும்தான் இருப்பார் என்று எண்ணாதைங்கோ, சனத்தைப் பிரித்து மேய்ந்து, அடுத்த தேர்தலிலும், பொது வேட்பாளர் என்று வந்து நிற்கபோகுது உந்த மனுஷன் என்றார்.

தம்பி பெடியங்களை பிரித்தவனுக்கு, இனி தங்களின்ர ஆட்களை பிரிப்பது ஒன்றும் பெரிசு இல்லை. இன்னும் என்காது சூடாக நெருக்கமாக வந்து, நரிக்கு வெட்கம், மானம், ரோஷம் எதுவும் இல்லை. கொஞ்சம் பொறுங்கோ அவனுக்கு, அதுதான் ரணிலுக்கு, தமிழர்மேல் நல்ல கோபம் இருக்கு, எதுவும் செய்ய மாட்டான், எங்கட சனம் மகிந்தாவை பிறகு நல்லது என்று சொல்லும். எங்களுக்கு எப்பவும், மாறி மாறி நல்லதுதானே! தம்பி இது ஓட்டுமடமே, எனக்கு வெளியே தெரியவில்லை தம்பியைக் கேட்டேன், தம்பி தானும் அதில் இறங்குகிறேன் என்றான்.

அட ஆலடி அரசியல் விமர்சகர்கள் இறங்குகிறார்கள். எனக் கவலையுடன் விடைகொடுத்தேன், தொப்பென்று ஒருவர் என்னருகில் இருந்தார்.

இருப்பை உறுதிப்படுத்திக்கொண்டு, நானும் எல்லாம் கேட்டேன். நீங்கள் வெளிநாடுபோல, உங்களுக்கு வியக்கிற வியர்வையில் தெரியுது, இந்த பஸ்சில் வருகிற சனத்தில

24 ஆம் பக்கம் பார்க்க...



மு.குறிப்பு: இப்பவும் பொருளை வைத்துவிட்டுப்போனால் அது அவரின் இடம்.அது அவருக்காக ஒதுக்கப்பட்டது. எந்தக்கொம்பன் வந்தாலும் இருக்க முடியாது.இது எழுதாத சட்டம்.





Luckyfly
Lucky Fly Reisebüro
Srilanka tour
இலங்கை சுற்றுலா வசதிகள்!
2022 Summer
Best Offers
COLOMBO
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
சொகுசு வாகன ஒழுங்குகள்!!
(Rental car)
யாவும் சிறப்பாகச் செய்து தருகிறோம்
SriLankan
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# பெட்ரோல்- திரவத் தங்கம்

## தொழில்நுட்ப வளர்ச்சி முதல் அழிவு தரும் போர்கள் வரை



ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயம் செய்வதில் பெட்ரோல் மிக முக்கிய பங்கு வகிக்கின்றதெனலாம். ஒவ்வொரு தடவையும் பெட்ரோலின் விலை உயரும் போது அது உலகளவில் அனைத்து நாடுகளின் பொருளாதாரத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது . இன்றைய நிலையில், பெட்ரோல் இல்லாத உலகத்தை கற்பனை செய்தே பார்க்க முடியாது. உலகத்தின் வேகமான இயக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் எரிசக்தியாய் திகழ்வது பெட்ரோல்தான். "திரவத் தங்கம்" எனப்படும் பெட்ரோலை முன்வைத்துதான், உலகெங்கும் பல்வேறு போட்டிகளும் போர்களும் நடக்கின்றன என்றால் மிகையில்லை.இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பெட்ரோல் உருவான வரலாறு மிகவும் சுவாரஸ்யமானது.

"crude oil" எனப்படும் கச்சா எண்ணெயினை சுத்திகரிப்பதன்மூலம் நமக்கு கிடைப்பதே பெட்ரோல். (இயற்கை வாயு, பெட்ரோல், பென்சீன், நாப்தா, மண்ணெண்ணெய், டீசல், தார் முதலான பல உட்பொருட்கள் கலந்திருக்கும் கலப்பட எண்ணையே 'கச்சா எண்ணெய்) கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இயற்கை பேரிடர் காரணமாக மண்ணில் புதையுண்டு இறந்த மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் உடல்கள் அழுகி (decompose) பாக்டீரியாக்களால் நொதிக்கப்பட்டு,பின்பு மண்ணில் உள்ள உப்புக்களுடன் சேர்ந்து வேதிவினைபுரிந்து, நிலத்திற்கு அடியில் நிலவும் உயர்அழுத்தம்மற்றும்வெப்பம்காரணமாக அருகிலுள்ள பாறை வெடிப்புகளுக்குள் பாய்ந்து அடர் கருப்பு நிறத்தை கொண்ட எண்ணெய் வளங்களாக உருமாறுகின்றது. லத்தீன் சொல்லான 'பெட்ரா' என்பதற்கு கல் என்றும், 'ஓலியம்' என்பதற்கு எண்ணெய் என்றும் பொருள்.

அதன்படி, 'பெட்ரோலியம்' (Petroleum பெட்ரோ ஓலியம்) என்றால், கல்லில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் என்பது பொருள். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பண்டைய பாபிலோனியர்கள் (இன்றைய ஈராக் ) மிகப்பெரிய கட்டிடங்களை கட்டுவதற்காக ஆழமான அத்திவாரங்களை தோண்டும்போதே முதன்முதலில் இந்த உசரனந ழடை கண்டுபிடிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. எரிபொருளாக பயன்படும் என்பதனை அறிந்திராத பாபிலோனியர்கள் அந்த கருப்பு நிற திரவத்தினை தமது கட்டிடங்களை கட்டுவதற்கான பசைபோலவே பயன்படுத்தினர். கச்சா எண்ணெய் சேர்த்து கட்டப்பட்ட சுவர்கள் கறையான்கள், எறும்புகள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதனை அவதானித்த பாபிலோனியர்கள் அதன் பின்னர் கச்சா எண்ணெயை வெகுநேரம் கொதிக்கவைத்து வற்றச் செய்து கிடைத்த "Asphalt" எனும் பொருளை நிலத்திற்குள் மறையும் கட்டிடத்தின் அஸ் திவாரச் சுவர்களின் மீது சாயமாக பூசியத்துடன் , கப்பல்கலைக் கட்டவும் பயன்படுத்தினர். பாபிலோ னியரைத் தொடர்ந்து,பெட்ரோலைக் கண்டறிந்து பயன்படுத்தியவர்கள் சீனர்கள். உலகின் முதல் நவீன எண்ணெய்க் கிணறு கி.பி.347 ம் ஆண்டு சீனாவில் கண்டறியப்பட்டது. மூங்கில் கம்புகளின் உதவியுடன் துளையிடப்பட்ட அந்தக் கிணறு, 800 அடி ஆழம் கொண்டதாக இருந்தது.நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தோமியினர் கச்சா வண்டல்களைப் பயன்படுத்தி நகைகள் செய்ததாகவும், கிமு1550 - 1070 காலகட்டங்களில் எகிப்தில் மம்மிகளை பதப்படுத்துவதற்காக இந்த புற்றுமண்ணை பயன்படுத்தியுள்ளனராம்.



பிரியா இராமநாதன் (இலங்கை)

எனினும் சமகால பெட்ரோலின் வரலாறு என்பது 18ம் நூற்றாண்டின் பிற்பகுதிகளிலேயே ஆரம்பமாகிய தெனலாம். தொழிநுற்ப புரட்சியின் விளைவாக உலகம் முழுவதும் எரிசக்தியின் தேவை அதிகரிக்கவே நிலக்கரி பயன்பாட்டினைவிட வேறு எரிபொருட்களுக்கான தேடல்கள் ஆரம்பித்தன.

1847ம் ஆண்டு, ஸ்காட்டிஷ் வேதியலாளர் ஜேம்ஸ் யங் (Scottish chemist James Young) என்பவர் பிரிட்டிஷ் நாட்டின் ஆல்ஃபிரெடன் (Alfreton) பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் கச்சா எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்து ஆய்வு செய்து அந்த எண்ணெயிலிருந்து விளக்கு எரிக்கும் திரவம், இயந்திரங்களுக்குப் பயன்படுத்தும் கிரீஸ் போன்றவற்றை உருவாக்கினார். பின்னர் அந்த எண்ணெய்களுக்கு பாராஃபின் எண்ணெய் (Paraffin Oil) எனப் பெயர்வைத்து காப்புரிமையும் (Patent Right) பெற்றார். பின், எட்வர்டு வில்லியம் பின்னி (Edward William Binney) எனும் புவியியலாளருடன் சேர்ந்து ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, தனது எண்ணெய்க் கண்டுபிடிப்புகளை விற்பனை செய்யத் தொடங்கினார்.

1853ம் ஆண்டு கனடா நாட்டைச் சேர்ந்த புவியியலாளர் ஆபிரஹாம் பினியோ ஜெஸ்னர் (Abraham Pineo Gesner) என்பவர் நிலக்கரியிலிருந் தும், நிலக்கீலிலிருந்தும் (Asphalt or Bitumen) ஒரு புதிய வகையான எரிபொருளைக் கண்டுபிடித்தார். அந்தப் புதிய கண்டுபிடிப்புதான் நாம் மண்ணெண்ணெய் என்று அழைக்கும் கெரோசின் (Kerosene). ஆபிரகாம் கெஸ்னர், தான் கண்டுபிடித்த

30 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# பக்கத்து இலைக்கு 'பாயாசம்'

காலமை கோப்பி குடுத்த வெள்ளிப் பேணிகளை கிணத்தடீல வைச்சு கழுவத் தொடங்க அங்கால யூஸ் கரைக்கத் தொடங்கிச்சினம். விசேசங்களுக்கு முதல் நாளே எசன்ஸ் வாங்கி சீனி பாணியும் சிற்றிரிக் அமிலமும் போட்டு காச்சி வைக்கிறது. பெரிய பிளாஸ்டிக் வாளீல காச்சின எசன்ஸை ஊத்தி தண்ணி விட்டு, சாக்கில உமியைப் போட்டுக் சுத்திக் கொண்டு வந்த ஜஸ் கட்டியை வடிவா கழுவீட்டு உலக்கையால நாலு போடு போட உடைஞ்சு வாற துண்டுகளை அள்ளிப்போட்டு சீனி அளவும் பாத்து யூசைக் கரைச்சு வைச்சம். பத்தரைக்கு வெக்கையா இருக்கும் அப்ப யூஸைக் குடுங்கோ எண்டு ஓடர் வந்திச்சுது. பதினைஞ்சு பேணி அடுக்கின tray ஐ தூக்கிக்கொண்டு நடுங்காம, ஊத்தாம ஆக்களுக்கால நெளிஞ்சு சுளிஞ்சு போய் எல்லாருக்கும் குடுக்க தம்பி சரியான தண்ணிவிடாய் ரெண்டு எடுக்கிறன் எண்டு சிலர் வாங்கி வாங்கி குடிச்சினம். ஆனாலும் அந்த வெக்கையிலும் எனக்கு உது வேணாம் கோப்பி தான் வேணும் எண்டு சிலர் அடம்பிடிக்க அதையும் குடுத்திட்டு வர மணி பதினொன்டாச்சுது.

ஓடிப்போய் கொட்டிலுக்க " சமையல் முடிஞ்சுதா " எண்டு கேக்க, "இந்தா வாழைக்காய் பொரியுது நீங்கள் போய் ஆயத்தப்படுத்துங்கோ " எண்ட பதிலோட ரெண்டு வடையும் சுடச்சுட கையில வந்திச்சிது. ஆறும் வரை பொறுமை இல்லாமல் வடையை வாயக்குள்ள போட்டிட்டு வாய்க்குள்ள வைச்ச படி ஊதி ஊதி ஆறப்பண்ணிக்கொண்டே சாப்பிட்டன். கிடாரத்தில இருந்த சோத்தை கிளறிப் போட்டு இறக்க சமைச்சு முடிஞ்ச கறிகள் எல்லாம் சட்டிக்குள்ள மாறிச்சுது.

சபை போடத் தொடங்கலாம் எண்ட நியூஸ்போக பொம்பிளை மாப்பிளையின்ட தேப்பன் மார் தேடித்தேடி செம்பு குடுத்து கையைப்பிடிச்சு ஒவ்வொருத்தரா சாப்பிடக் கூட்டிக்கொண்டு வந்திச்சினம் .

குனிஞ்சு நிமிந்து சபை போட்டிட்டு களைச்சுப் போய் வர யாரோ தந்த மஞ்சள் essence ஜூஸை குடிக்க தலையால வெக்கை ஆவி பறந்திச்சுது. "தம்பி உந்தச் சாக்கைக் கொண்டா " எண்டு அண்ணா ஒராள் கூப்பிட சாக்கைக் கொண்டு ஓடினன். எனக்குப் பின்னால தும்புத்தடியோட வந்தவருக்குப் பேச்சு "உனக்கென்ன விசரே, சனத்தை கலைக்கத்தான் தும்புத்தடி, நல்ல நாள் விசேசத்தில விளக்குமாறு தும்புத்தடி எடுத்தா விளங்குமே கொண்டு போ அங்கால " எண்டு. பந்திப்பாயை பக்குவமா உதறி சோத்துப் பருக்கைகளை சிந்தாமல் சிதறாமல் அப்பிடியே சாக்குக்க கொட்டீட்டு, விழுந்திருந்த சாப்பாட்டை ரெண்டு மட்டையால அள்ளி, ஊத்தியருந்த பாயாசத்தை ஈரத்துணி போட்டுத் துடைச்சிட்டு நிமிந்து இப்ப ஆக்களைக் கூப்பிடுங்கோ எண்டது பெடியள் குறூப்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

அடுத்த பந்திக்கு ஆக்கள் எல்லாம் வந்து இருந்திச்சினம். Extra வந்த ரெண்டு பேர் இருக்க இடம் இல்லைப் போல எண்டு கேட்டிட்டு திருப்பி போக வெளிக்கிட, ரெண்டு பேர் அரக்கி நடுவில இடம் இருக்கு வாங்கோ எண்டு இடம் குடுக்க கழுவின வாழை இலையோட முதல் பசழுரி போச்சுது.

முதல் நாள் சோடிச்ச குறூப் தான் அடுத்த நாள் சபையும் போடிறது. புதுக் கடகத்துக்க சோறு, சோறு போட ஒரு எவர்சில்வர் தட்டோட முதல் ஒரு குறூப் போகும். நாலு கறி போட்ட தூக்குச்சட்டியோட போறது தான் ரெண்டாவது, பயித்தங்காய், பூசணிக்காய், கோவா வறை எண்டு எல்லாத்தையும் போட்டிட்டு வர, மூண்டாவதா கத்திரிக்காய் சம்பல் வரும், கரண்டி மாறினா புளிச்சுப்போயிடும் எண்டு அதை தனிச்சட்டீல தான் கொண்டு போறது. உருளைக்கிழங்கு பிரட்டல் போக பின்னால அப்பளம், மிளகாய் பொரியல் , வாழைக்காய் பொரியல் போட்ட சுளகோட போவினம். கடைசியாய் பருப்புப் போட்டு மேல நெய் விட்டிட்டு வர, "சரி சாப்பிடலாம் " எண்டு செம்பு குடுத்தவர் சொல்ல முதல் செம்பு வாங்கி முதலாவதா வந்திருந்தவர் கைவைக்க சபை களைகட்டும். இந்த முதல் மரியாதை நெருங்கிய உறவில் மூப்புக்கு கிடைக்கும் மரியாதை.



சாப்பிட்டுக்கொண்டிருக்கேக்க இலை வெறுமையாக முதல் பாத்து பாத்து சோறும் கறியும் போகும். ரெண்டாவது தரம் சோறு போட்டாப் பிறகு தான் சொதி, குளம்பு தயிர் எல்லாம் போகும். முழுப்பேரும் சாப்பிட்டு முடியேக்க தான் பாயசத்தையும் வடையையும் கொண்டு வாறது . பக்கத்து இலைக்கு கேக்க முதலே பாயாசம் போகும். பாயசத்தோட சேத்துச் சாப்பிட இன்னொருக்கா வடையும், அப்பளமும் போகும்.

28 ஆம் பக்கம் பார்க்க...






# போதைப் பிரியர்களுக்கான மாற்று வழி என்ன?

## பாதுகாப்பான மதுபானம்

பாதுகாப்பான மதுபான வகை ஒன்றைக் கண்டுபிடிப்பதுதான். மதுவின் தாக்கமானது நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துவதாகும். நரம்புக் கலங்கள் தமக்கிடையே செய்திகளை அனுப்புவதற்கும் தொடர்பாடலுக்குமாக நரம்பியல் கடத்திகளைப் (neurotransmitter) பயன்படுத்துகின்றன. பலவித நரம்பியல் கடத்திகள் உடலில் உள்ளன.

இவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை அமைதிப்படுத்தும் சரியான மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் மனிதனுக்கு மது கொடுக்கக் கூடிய அமைதியையும், சந்தோசத்தையும் கொடுக்கலாம். அவ்வாறு அமைதிப்படுத்தும் ஒரு இரசாயனம் Gamma aminobutyric acid (Gaba) என்பதாகும்.

இது மூளையில் உற்பத்தியாகிறது. மருந்தாகவும் கிடைக்கிறது. இவ்வாறான இரசாயனங்களின் கலவைகளை மதுவிற்கு பதிலாக உபயோகிக்கலாம். இவற்றில் மதுவின் தொக்கிய விளைவு இருக்காது என்கிறார் David Nutt என்பவர். மற்றவர்களுடன் மனம்விட்டுப் பேசி நல்லுறவை வளர்க்க முடியும். மதுவினால் எற்படும் வன்முறை போன்ற பின்விளைவுகளும் இருக்காது என்று மேலும் சொல்கிறார்.

தான் அவ்வாறான ஐந்து பொருட்களை இனம் கண்டுள்ளதாகவும் அவற்றை சரியான அளவுகளில் கலந்து பரீட்சித்திருப்பதாக Guardian ல் எழுதிய ஒரு கட்டுரையில் தெரிவித்தார். அதை மது போன்ற திரவ வடிவில் தயாரிக்க வேண்டும். பாவனையாளர்களின் தேர்வுகளுக்கும் ஏற்ப பல்வேறு நிறங்களிலும் சுவைகளில் கொடுக்க வேண்டும் என்பதே தன் முன் உள்ள சவால் என்கிறார்.

சரி இதற்கான ஆதாரங்கள் என்ன? எங்கே பரீட்சித்துப் பார்த்திருக்கிறார்.

தானே தனக்குப் பரீட்சித்துப் பார்த்ததாகக் கூறினார். தான் அதை உட்கொண்ட போது தனக்கு பதற்றங்கள் ஏதும் இன்றி மனம் ஆறுதலாக இருந்தத்தகவும், சுகமான தூக்கம் வந்ததாகவும் சொல்கிறார். பின்னர் அதற்கான மாற்று மருந்ததைச் (antidote ) சாப்பிட்டதும் சில நிமிடங்களில் சகசமான நிலைக்கு வந்துவிட்டதாகவும், ஒரு விரிவுரையையும் நடாத்த முடிந்ததாகவும் சொல்கிறார்.

இந்த ஆய்வு பற்றி சில மதுபானத் தயரிப்பாளர்களிடம் வினவியபோது அவர்களுக்கும் இதில் இத்தகைய தொக்கிய விளைவற்ற மதுவைத் தயாரிப்பதில் ஆர்வம் இருப்பதாகத் தெரிகிறது. பணம் கொட்டும் இடத்தைத் தம் கையினுள் அடக்குவதில் அவர்கள் கில்லாடிகள் அல்லவா?

## பாதுகாப்பானதுதானா?

கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. போதை கொடுக்கும் மதுபோன்ற பானம். ஆனால் மது போன்ற பக்கவிளைவுகள் அற்றது. அதிலிருந்து உடனடியாக விடுபட்டு வேறு வேலைகளில் ஈடுபட வேண்டுமாயின் அதன் தாக்கத்திலிருந்து உடனடியாக மீள்வதற்கு மாற்று மருந்துகளும் உண்டு.

ஆகா அற்புதமான ஐடியா.

பார்க்கில் பார்ட்டியில் அல்லது வேறு எங்காவது அதை மசுக்கிடாமல் அடித்து சந்தேசமாக இருக்கலாம், வீடு போக முன்னர் மாற்று மருந்தை வாயில் போட்டுவிட்டு மனைவி முன் ஒன்றும் தெரியாத அப்பாவியாக பாவனை காட்டலாம்.

பள்ளிக்குப் போக முன் ஒரு டோஸ் அடித்துவிட்டு பள்ளி போகலாம். ஆசிரியர் வருவதற்கு முனனர் மாற்று மருந்து அடித்துவிட்டு நல் மாணவனாக கலர் காட்டலாம்.



மொத்தத்தில் எல்லாமே ஏமாற்றுக் காரியங்கள்தாம். இவை எதுவுமே மனித மனத்தில் உண்மையான மகிழ்ச்சியை வளர்ப்பதற்கானவை அல்ல. அவற்றை மறக்கச் செய்து போலியான ஆனந்தத்தில் மூழ்க வைப்பவைதான். ஏற்கனவே இதை ஒத்த மருந்துகள் பாவனையில் இருக்கவே செய்கின்றன.

Benzodiazepine tif மருந்துகள் அத்தகவையன. இவை மனப்பதற்றத்தை தவிர்த்து அமைதிப்படுத்தக் கூடியவை. வழமையாக வலிப்பு, மதுவில் இருந்து விடுபதற்காக, தசைப்பிடிப்பு, தூக்கத்திற்கு என்று பல காரணங்களுக்காக உபயோகிக்கப்படுகின்றன.

Diazepam, Chlordiazepoxide போன்ற பலவற்றை உதாரணமாகச் சொல்லலாம். வலியம், லிபிரியம் போன்ற பெயர்கள் பலருக்கும் பரிச்சயமானவை. இவை போன்ற மருந்துகள் பல உள்ளன.

ஆனால் தன்விருப்பின் பேரில் வாங்கும் சுய பாவிப்பானவை அல்ல மருந்துவர்கள் நோயாளிகளுக்கு தமது கண்காணிப்பின் கீழ் மட்டுமே இத்தகைய மருந்துகளை உபயோகிக்கிறார்கள். குறிப்பட்ட காலத்திற்கு குறிபட்பிட்ட அளவுகளில் கட்டுப்பாடுகளுடன் மட்டும். ஏனெனில் அவற்றிக்கும் ஆட்பட்டு விடுபட முடியாத (addiction) நிலை ஏற்படும். அதனால்தான் பிரிஸ்கிரிப்பசன் இன்றி வாங்க முடியாது.

இப்பொழுது தொக்கற்ற மது என்ற பெயரில் அவற்றை அல்லது அதை ஒத்தவைகளை வர்த்தக மயமாக்கப் பார்க்கிறார்கள். திறந்த பொருளாதாரம் போல திறந்த போதைப் பாவனை. ஒரு குழியிலிருந்து எடுத்து மற்றொரு படுகுழியில் வீழ்த்தும் விளையாட்டுத்தான்.

மற்றொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். மதுவிற்கு மாற்றாகத் தான் தேர்ந்தெடுத்த மருந்துகள் எவை என்பது பற்றி அவர் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. அது மட்டுமல்ல அவை பரந்த மட்டத்தில் ஆய்வு செய்யப்படவும் இல்லை. சுய அனுபவம் பற்றியே பேசியிருக்கிறார்.

எனவே 'நம்பத் தகுந்தது அல்ல. அவைக்கு உதாவது' என்று தட்டிக் கழித்துவிடலாமா?

மனித மனங்களில் கவலையும் அதிருப்தியும் தன்னம்பிக்கை இன்மையும் இல்லாது ஒழியும் வரை மாய உலகில் தன்னை மூழ்க வைத்து தற்காலிக சுகம் தேடும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

"யேசு வந்தார் பின்பு காந்தி வந்தார். மனிதன் மாறவில்லை." எனப் பாடினார்கள்

அவன் மாறப் போவதுமில்லை. மது மருந்து மாத்திரைகள் என மனித மனத்தை மாய உலகில் பறக்க வைப்பதற்கான முயற்சிகள் தொடரவே செய்யும்.

"எம்மையும் எம் சந்ததிகளையும் நாம்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்." எஸ்.ஜே.வி ஞாபகம் வந்தால் நான் அதற்குப் பொறுப்பில்லை.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்








# பகிர்ந்துண்டு வாழாத வாழ்வென்ன வாழ்வோ?

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை"

பாட்டன் காலத்து வாயிற்படிகளின் இருபுறத் திண்ணைகள் எங்கே போயின? தெருவில் செல்லும் ஆடுமாடுகளுக்கு தாகம் தீர்க்கவென வீதியோரம் வீட்டுக்கு வீடு அமைக்கப்பட்ட நீர்தொட்டியும், வழிப்போக்கர்களுக்கு தாகம் தீர்க்கும் மண்குடமும் எங்கே? இரவுப் பொழுதிலும் உணவு அத்தனையும் உண்ணாமல் யாரும் பசி என வந்தால் மிச்சம் வைக்க வேண்டும் என நீர் ஊற்றி வைத்த சோற்றுக் கலயம் எங்கே? அம்மா என்றழைத்தவர்க்கு முகம் நோக்கி அற்றது போக்கும் அத்தகையவள் கரங்கள்தான் எங்கே? இந்த நவீன கட்டுமானம் நவநாகரிகம் என்ற நரித் தோல் போர்த்திக் கொண்டதா? பக்கத்து வீட்டில் ஒரு பருக்கை உணவு இல்லாமல் இறந்துபோய்விட்ட விடயம் தெரியாமல் வாழும் முறை நாகரிக வளர்ச்சி என ஆகிவிடுமா?அடுத்தவன் பார்த்து விட கூடாது என்றளவில் செல்வத்தை மறைக்க கட்டும் மதிற்சுவருக்கு அப்பால் எப்படி ஒருபிடி அரிசியும், சீனியும் பரிமாற முடியும் அட கொடுமையே! படைத்தவனையே பதைபதைக்க செய்யும் பகட்டு வாழ்வு என்பது நாகரிக கொடுமையல்லவா?



கரிணி
(யேர்மனி)

ஒருவர் வயிறு பசித்து கண்கள் இருட்டி, காதுகள் அடைபட்டிருக்கும்போது அத்தகையவரிடம் சமூகம், கல்வி, ஞானம் என்பனவற்றை புகட்டுதல் அழகல்லவே. அவை சரியாக உள்வாங்கப்படக்கூட மாட்டாது. பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பதற்கு ஏற்ப களவு, பொய் போன்ற ஒழுக்கக்கேடான செயல்களையெல்லாம் செய்யத் தூண்டும் இந்தப் பசி. உலகில் உண்ணவே முடியாத பொருட்கள் எவ்வளவு இருக்கின்றன என்பது கொடும் பசி உடையவருக்கே தெளிவாக புலப்படும்.ஏனெனில் கண்ணில் புலப்படும் எதையேனும் வாயில் வைக்கும் குழந்தையை விட அதிகமாக பசித்தவர் வயிறானது கல், மண் என காண்பவை எவற்றையும் உண்ண முடியாதா என ஏங்கும்.

உலகில் ஒருவருக்கு உணவு இல்லை எனில் இந்த உலகு எதுக்கு இதனை கொழுத்தி விடுவோம் என்றார் பாரதி. கண்களுக்கு முன்பு கடைகளிலும் மற்றவர் கரங்களிலும் வகை வகையான உணவுகள் இருக்கும் போது ஒருவர் பசியால் வாடுவது மிகவும் கொடுமையிலும் கொடுமை. பக்கத்து வீட்டில் பசித்து வயிறு ஒட்டியிருக்க பாற்சோறும் பாயாசமும் உண்பது எவ்வாறு. இல்லாதவர், இயலாதவர் முன்னிலையில் தன் செல்வச் செழிப்பு, ஆற்றல் பற்றி பெருமை பேசுவது எவ்வகையான கீழ்மையான இழிசெயல் என ஆன்றோர் பலவாறு கூறியுள்ளனர். நல்லதொரு விளைநிலத்தில் அகலக் கிளைகள் பரப்பி கண்கவர் கனிகளை கொண்டு ஓங்கிநிற்கும் நச்சு மரத்தினால்



பயன் என்ன வழங்கிட முடியும் என்று கஞ்சத்தனத்தை அகற்றி வாழும்படி பெரியோர் கூறியுள்ளனர்.

**"வாடிய பயிரைக்**
**கண்டபோதெல்லாம் வாடினேன்.**
**பசியினால் இளைத்தே**
**வீடுதோறிரந்தும்**
**பசியறாதயர்ந்த வெற்றரைக்**
**கண்டுளம் பதைத்தேன்.**
**நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்**
**நேருறக் கண்டுளந் துடித்தேன்.**
**ஈடில் மானிகளாய் ஏழைகளாய்**
**நெஞ்சு இளைத்தவர்**
**தமைக்கண்டே இளைத்தேன்."**

என்று ஊன் உருகி விழிநீர் பெருகி "இறைவா உலகம் முழுதும் அனைத்து உயிரினங்களும் இன்புற்றிருக்கும் நிலையை இக்கணமே ஏற்படுத்த மாட்டாயா?" என உளம் பதைத்து வேண்டுவார் வள்ளலார் பெருமான். கருணை இவ்வாறு இருத்தல் வேண்டும். அற்றாரைக் கண்ணில் கண்ட பொழுதே மடைதிறந்த வெள்ளம் போல் பெருக்கெடுக்க வேண்டும். எனக்கு, என்னுடையது என்ற கொள்கை உடைந்து உதவ வேண்டும்.

"ஈயார் தேட்டை தீயார் கொள்வர்" அதாவது ஓடிக் கொண்டிருக்கும் நீரே தூய்மையானது. குளம் குட்டை போன்றவற்றின் நீரை சுத்தப்படுத்தியே பயன்படுத்த முடியும். தேங்கிய நீர் அழுக்கடைவது போல ஈயாது பொத்திப் பாதுகாக்கும் செல்வமும் அழுக்கடைந்து இன்னல்களைக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாது களவு, மருத்துவச் செலவு, தீயவழி போன்ற எதிர்மறையான விளைவுகளால் அழிந்து போகும்.

கஞ்சத்தனமும் பேராசையும் ஒருவரை தனிமைப்படுத்திவிடும். அவரை நிழல் போல் சார்ந்திருப்பவர் உள்ளகத்திலே உண்மை அன்போடு இருக்க மாட்டார்கள். மாறாக சரியான சந்தர்ப்பத்திற்காகவே காத்திருப்பார்கள். இன்றைய சூழலில் இன்னும் பலர் தாம் தமக்காகவா பாடுபடுகின்றோம், தாம் பெற்ற பிள்ளைகள் வறுமைப்பட கூடாது என்றுதான் சேமிக்கின்றோம் என ஓடி, ஓடி உழைத்து சேமிப்பார்கள். இதனால் அந்த பிள்ளைகள் ஆளுமையற்ற வகையில் வளர்க்கப்படுவதோடு ஏதோ ஒரு காரணத்தினால் இந்த செல்வங்கள் இழக்கப்படும் தறுவாயில் இவ்வுலகில் நின்று நிலை கொள்ளும் சக்தியற்று வீழ்ந்து போவார்கள். அதனால்தான் தம் பிள்ளை ஊனமாக பிறந்தால் அப்பிள்ளைக்கு அளவாக சொத்து சேமித்து வையுங்கள் மாறாக நல்ல ஆரோக்கியமான பிள்ளைக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# எனது நாடக அனுபவங்கள் 19

ஆனந்தராணி பாலேந்திரா (UK)



முகமில்லாத மனிதர்கள் நாடகத்தில் எழுத்தாளராக மா. சத்தியமூர்த்தி மானசியாக ஆனந்தராணி பாலேந்திரா- 1996 லண்டன்

# முகமில்லாத மனிதர்கள் நாடகம்-1980

கடந்த இதழில் 'முகமில்லாத மனிதர்கள்' இதுவரை நான் நடித்த நாடகத்தில் இருந்து ஒரு வித்தியாசமான நாடகமாக இருந்தது என்று குறிப்பிட்டிருந்தேன். இந்த நாடகம் நடுத்தர வர்க்கத்தினரின் ஒரே மாதிரியான வேரோட்ட வாழ்க்கையையும் இதிலிருந்து விடுபட எத்தனிக்கும் ஒருவரைப்பற்றியும் கூறும் நாடகம்.

வீடு பள்ளிக்கூடம் பல்கலைக்கழகம் பபீட்சைகள் வெளியுலகம் தொழில் காதல் திருமணம் குழந்தைகள் பதவியுயர்வு வீடு கட்டுதல் வீடு வாங்குதல் பற்றி பிள்ளையின் எதிர்காலம் பற்றிய கவலைகள் கிரிக்கெட் சினிமா அரசியல் பற்றிய பேச்சுகள் நோய் துன்பம் பற்றிய கவலைகள் என இவர்கள் சுற்றிச் சுற்றிச் செல்லும் சூழல் வட்டத்தில் இழுபட்டுச் செல்லும் மனிதர்கள். தனித்தனியே இவர்களை இனம் காண முடியாது. முகங்கள்தான் வேறு வேறு. இந்த வட்டத்தில் இருந்து விடுபட நினைக்கும் ஒருவர் கடைசியில் தானும் முகமில்லாத மனிதர்தான் என உணர்கிறார்.

ஒரு எழுத்தாளர் ஒரு நாடகம் எழுத முற்படுகிறார். ஒன்றும் சரிவரவில்லை. 'எதைப்பற்றி நான் எழுத? யாரைப்பற்றி நான் எழுதிறது? எனக்கு எத்தனை பேரைத் தெரியும்? அதோடை அவையைப் பற்றி எனக்கு என்னதான் தெரியும்

எழுத்தாளர் பார்வையாளர்களைப் பார்க்கிறார். இவர்களில் சிலரின் கதை சுவாரஸ்யமாக இருக்கும் என்று எண்ணி பார்வையாளர்கள் சிலரை மேடைக்கு வரும்படி அழைக்கிறார். அவர்களில் நால்வர் தயக்கத்துடன் மேடையில் ஏறுகிறார்கள். வரிசையில் வந்து நிற்கும் அவர்களைப் பார்த்து என்ன பெயர் என்று கேட்கிறார். அமல் விமல் கமல் நிர்மல் என்று கூறுகிறார்கள். எழுத்தாளர் 'அமல் விமல் கமல் நிர்மல்! அப்பிடி இருக்கமுடியாது என்று கத்துகிறார். நாலாவது பார்வையாளரிடம் அவரது உண்மையான பெயர் என்ன என்று கேட்கிறார். அவர் இந்திரஜித் என்கிறார். அப்ப ஏன் பொய் சொன்னாய்? என்று கேட்கிறார். பயம். ஒருவன் ஒழுங்கை வழக்கத்தை மீறினால் அமைதி குலைஞ்சு போகும் என்று கூறி தான் மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்பட நினைத்து கடைசியில் தானும் அவர்களுள் ஒருவராகிப் போன கதையைக் கூறுகிறார். இந்த நாடகத்தில் வரும் நான் ஏற்று நடித்த மானசி என்ற பாத்திரம்கூட சமூகத்துடன் முரண்படாது ஒத்துப்போகும் மனப்பாங்கின் மாதிரி உருவந்தான்.

இந்த நாடகத்தில் ஆரம்பத்தில் பார்வையாளர்கள் மத்தியில் இருந்து நான்கு நடிகர்கள் மேடைக்கு வந்து நடித்தது பல பார்வையாளர்களுக்கு வித்தியாசமாக இருந்தது. இவர்களை மேடைக்கு வரும்படி அழைத்த அந்த எழுத்தாளராக நடித்தவர் பிரபல ஈழத்து மெல்லிசைப் பாடகர் மா.சத்தியமூர்த்தி. அந்நாட்களில் இலங்கை வானொலியில் பல மெல்லிசைப் பாடல்களைப் பாடி நன்கு அறியப்பட்டவராக இருந்தார். இவர் பாடிய 'ஓ வண்டிக்காரா' இவருக்குப் பெரும் புகழைக் கொடுத்த பாடலாகும்.

'முகமில்லாத மனிதர்கள்' நாடகத்தில் பல பாடல்கள் இடம்பெற்றன. அதனால் தானே பாடி நடிக்கக்கூடிய நடிகரை நாடக நெறியாளர் பாலேந்திரா தேடியபோது அவருடைய நண்பர் சாந்திநாதன் மூலம் அறிமுகமானவர்தான் சத்தியமூர்த்தி. அவரை அந்த எழுத்தாளர் பாத்திரத்தில் நடிக்க வைத்தார்.

நடிப்பது இதுதான் அவருக்கு முதல்தடவை. பாலேந்திரா அனேகமாக தனது நாடகங்களில் முன்அனுபவம் இல்லாத நடிகர்கள் பலரை நடிக்க வைத்து அந்நாடகங்கள் வெற்றி நாடகங்களாக ரசிகர்களால் வரவேற்கப்பட்டன. சத்தியமூர்த்தியும் தான் ஏற்ற பாத்திரத்தை வெகு சிறப்பாகச் செய்து பெரும் பாராட்டுகளைப் பெற்றார். பாடல்களையும் மிகவும் நன்றாகப் பாடினார். இலங்கையில் ஆரம்பித்து லண்டனில் தொடரும் எமது நாடகப் பயணத்தில் சத்தியமூர்த்தி 1980இல் இணைந்து இன்றுவரை தொடர்ந்து எம்மோடு பயணித்து வருகிறார். லண்டனில் பாலேந்திரா தயாரித்து நெறிப்படுத்திய'எரிகின்ற எங்கள் தேசம்' 'துண்பக் கேணியிலே' 'பெயர்வு' போன்ற நாடகங்களில் பங்குபற்றியுள்ளதுடன் எமது குழுவின் பிரதான பாடகராக 'கான சாகரம்' ஈழத்து மெல்லிசை நிகழ்ச்சியில் பாடுவதுடன் சிறுவர் இளையோர் நாடகங்களிலும் பின்னணிப் பாடகராகப் பாடி வருகிறார்.

'முகமில்லாத மனிதர்கள்' நாடகத்தில் வரும் மற்றொரு முக்கியமான பாத்திரம் இந்திரஜித். இந்தப் பாத்திரத்தில் நடித்தவர் கானகலாதரன். இவரும் நடிப்புத்துறைக்குப் புதியவர்.

மிகுதி அடுத்த இதழில்...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா 2022
Straßenfest der Tamilen
02.09.2022
Fr. 16:00 - 00:00
03.09.2022
Sa. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
westentor
Rheinische Str.
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa
Integrationsagentur der Stadtteil-Schule Dortmund e.V.
தமிழர் கலையகம் TKD
SIVANDIGITAL SOUND&MORE
ortel MOBILE
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90



# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 18

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# “நிறை ஓதம் நீர் நின்று!”

தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கு அமரர் சிறப்பு கண்டார்.

அபிநயக்ஷேத்திராவின் பயணத்தில் பெறும் அகவெளி அனுபவமும், ஆய்வும், ஆனந்தமும் அதிகரித்துக் கொண்டே செல்வதை அவதானித்தவளாய், மரபு மாறாத மற்றுமொரு புதிய மார்க்கத்தை செதுக்கிடும் அகத்தூண்டலில் உருப்பெற்றதே “ நிறை ஓதம் நீர் நின்று “ – ஐம்பெருங் காப்பிய மார்க்கம்.

புகப் புகப் பேரொளி காட்டவல்ல தொல்லுதமிழ்த் திரவியத்தை, நல்லியல் நாட்டியத்தில் கலந்திடச் செய்ய, உயிரிசை தந்த இசையிறை ராஜ்குமார் பாரதி ஐயாவைப் போற்றிப் பணிகின்றோம். செறிந்த இயலாக்கமும், ஆழ்ந்த லய அமைப்பும் , நுண்ணிய இசையுமென



ஆய்வுப் படைப்பாக பாரதி ஐயா தரும் போது, வெள்ளமெனப் பாய்ந்த உள்ளக் களியை மீள மீள நினைந்து பகிர்ந்தோம்.

ஐம்பெருங் காப்பிய மார்க்கத்தில் முற்பகுதியில் தமிழ் வணக்கமாக புஷ்பாஞ்சலி, ஜதீஸ்வரம், சீவகன் கவுத்துவம் , சிலப்பதிகார வர்ணம் என்பன இடம்பெற்றன. இதனை வெற்றிமணியின் கடந்த மாத இதழில் குறிப்பிட்டு இருந்தோம். வர்ணத்தினைத் தொடர்ந்து மணிமேகலை பதம் இடம்பெற்றது.

துணிவும் பணிவும் கொண்டு துலங்கும் பெண்டிர், தெய்வமெனப் போற்றப்படும் வரலாற்றினைக் காப்பியங்கள் காட்டித் தருகின்றன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.

மணிமேகலை காப்பியத்தின் முக்கிய கதையாக ஆபுத்திரன் கதை திகழ்ந்ததானால் மட்டும் அன்றி இது நம் இலங்கையில் மணிபல்லவத்தீவில் நடந்தேறிய கதை என அறிவதால் ஆபுத்திரன் கதையை மையப்படுத்தி மணிமேகலை பதம் , “மணிபல்லவத்தீவில் மணிமேகலை“ என்ற தலைப்பில் அமைந்திருந்தது.

அத்தோடு இந்த மணிபல்லவ தீவில் தான் மணிமேகலை கையில் பெரும் புதையலாக பசிப்பிணி தீர்க்கவல்ல அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் கிடைக்கப்பெறுகிறது.

கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவி தன் மகளை ஒரு புத்தத் துறவியாக வளர்த்தாள். ஒரு சமயத்தில் மணிமேகலையும் அவளுடைய தோழியும் வனத்திற்குப் பூப்பறிக்கச் சென்றிருந்தபோது, உதயகுமரன் என்ற சோழ மன்னன் மணிமேகலையின் மீது காதல் மயக்கம் கொண்டான். கடலின் கடவுளான மணிமேகலா, மணிமேகலையின் உலக இன்பங்கள் துறந்த வாழ்க்கையைப் பாதுகாக்க, அவளைத் தான் அறியாமலே மணிபல்லவம் என்ற தீவில் கொண்டு சென்று விட்டாள். அத்தீவில் மணிமேகலை ஒரு புத்த பீடிகை மூலம் தனது முன்பிறப்பைப் பற்றி அறிந்தாள். அதன் பிறகு, கடலின் கடவுள் மணிமேகலா, மணிமேகலையிடம் அவள் ஏன் மணிபல்லவத்திற்கு அழைத்து வரப்பட்டாள் என்பதைக் கூறி, மூன்று அதிசய மந்திரங்களையும் கற்றுக்கொடுத்தாள். அத்தீவில் மணிமேகலை ‘அமுதசுரபி‘ என்ற உணவுக் கிண்ணத்தைக் கண்டெடுத்து, அதிலிருந்து அளவற்ற உணவைப் புகாரிலுள்ள ஏழை எளியோருக்கு வழங்கினாள். இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்னும் மூன்று கருத்துகளையும் இக்காப்பியம் அழுத்தமாகக் கூறுகின்றது

தானம் செய்மின்

ஐம்பெருங் காப்பியங்களில் வளையாபதி ,குண்டலகேசி இரண்டிலுமே குறிப்பிடப்பட்ட தத்துவங்கள் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் தினமும் சிந்திக்க வேண்டிய திருக்குறளை ஒத்தன. ஊன், உடல் ,சொத்து, செல்வம், பெயர், புகழ், குடும்பம், ராஜ்ஜியம் என யாவுமே அழிந்துபோகவல்லன என்ற நிலையாமையை தெள்ளத் தெளிவுற உணர்வுக்கும்



ஆய்வும் நடன ஆக்கமும் கலாசூரி திவ்யா சுஜேன் (இயக்குனர்– அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி)



இசையும் மார்க்க ஆக்கமும் ‘ஞானபாநு’ கலாநிதி ராஜ்குமார் பாரதி (மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப் பெயரன்)

காப்பியங்கள். பொய் சொல்ல கூடாது, புறம் சொல்லலாகாது, உயிர்களிடத்தே அன்பாக இருக்க வேண்டும், சிறியாரோடு சேரக் கூடாது என இன்ப வாழ்விற்கான வழிமுறையையும் கற்றுக் கொடுக்கிறது.

இத்தத்துவங்களைத் தம் வாழ்வில் இயல்பினில் ஏற்ற ராஜ்குமார் பாரதி ஐயா , வளையாபதி குண்டலகேசி இரண்டினையும் இணைத்து , தத்துவப் பாடலாக வடித்துள்ளார். உயிர்கள் ஓம்புமின் , ஆருயிர் போற்றுமின்


சீவகசிந்தாமணி , சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என நிறை கடலாய் விரியும் ஐம்பெருங் காப்பியத்தில் ஆழித் திவலைகளை முத்தமிழ் படைப்பாய் , இசை மேதை ஞானபாநு ராஜ்குமார் பாரதி ஐயாவின் பிறந்த நாளை ஒட்டி அவர் முன்னிலையில் சமர்பித்தோம். கண்டோர்க்கும், கருதியோர்க்கும் அறமே அணிகலனாகட்டும். ஐம்பெருங் காப்பியங்கள் போற்றுமின்



30 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



KALAIMAMANI
PASAIYOOR A. JESUTHASAN
நாட்டு கூத்து / இயக்குனர் / இசையமைப்பாளர் / பாடகர் / எழுத்தாளர் / கவிஞர்
YouTube
DT 770 PRO




# நெடுங்கணக்கு

தமிழில் நெடுங்கணக்கு என்றால் எல்லோருக்கும் தெரியும். பட்டியலிடப்பட்ட தமிழ் எழுத்துக்களையே இப்பெயரால் அழைத்துவருகிறோம். இத்தமிழ் எழுத்துப் பட்டியல் ஏன் நெடுங்கணக்கு என அழைக்கப்பட்டது. 'நெடுமை

+ கணக்கு' என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையே நெடுங்கணக்கு. நெடுமை என்ற சொல் 'நீளம், உயரம், காலம் முதலியவற்றின் நீட்சி, அளவின்மை, ஆழம், கொடுமை, பெண்டிர் தலைமயிர்" என்னும் பொருளுடையது. கணக்கு என்ற சொல் 'எண், கணிதம், முறைமை, முடிவு, தொகை, அளவு, எழுத்து, நூல், விதம், ஒழுங்கான ஏற்பாடு' என்னும் பொருளுடையது. நெடுங்கணக்கு என்னும் சொல்லுக்கு "அளவின்மையுடைய ஒழுங்கான எழுத்து ஏற்பாடு' என்னும் பொருளைக் கொள்வதே பொருத்தமாகும் என எண்ணுகிறேன். ஏன் அவ்வாறு கொள்ளவேண்டும்என்பதற்கு மறுமொழி வருமாறு:

மனித மொழி ஆக்கப் பண்புடையது. "பிறப்பாக்கம்" (Gener ative) என்பது கணிதவியல், பௌதி கவியல் துறைகளுடன் தொடர்புடையது. மொழி பேசும் ஒருவர் ஒரு நாளில் எத்தனையோ வாக்கியங்களை அல்லது கூற்றுகளை உண்டாக்கிப் பேசுகிறார். அவற்றை நாம் எண்ண முடியாது.



தகைசால் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

அவ்வாறு எண்ண முடியாத வாக்கியங்களை உண்டாக்கும் மனித பேச்சுப் பொறிக்கு நம்முடைய மொழியிலே எண்ணக்கூடிய 12 உயிர் ஒலிகளும் 18 மெய் ஒலிகளுமே உள்ளீடுகள் ஆகின்றன. 12 உயிர் ஒலிகளுக்கும் 18 மெய் ஒலிகளுக்கும் 30 எழுத்து வடிவங்கள் உள்ளன. அம் முப்பது எழுத்துக்களின் சேர்க்கையாலே எத்தனையோ எழுத்து வடிவங்கள், சொல் வடிவங்கள், வாக்கியங்கள் பிறபிக்கப்படுகின்றன. இத்தகைய எழுத்து வடிவங்கள் அளவில்லா எழுத்து வடிவங்களை ஆக்கவல்லன என்பதை உணர்த்தவே 'அளவின்மை' என்னும் பொருளுடைய நெடுமை என்னும் சொல்லும் 'எழுத்து' என்னும் பொருளுடைய கணக்கு என்னும் சொல்லும் சேர்ந்து நெடுங்கணக்கு எனத் தமிழ் இலக்கண நூலார் பயன்படுத்தினர். நவீன மொழியியலார் பிற்காலத்திலே முன்வைத்த 'Generative Grammar' என்னும் கோட்பாட்டினை நெடுங்கணக்கு என்னும் தொடராலே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உணர்த்திய தமிழ் இலக்கண நூலாரின் நுண்ணறிவு பாராட்டுக்குரியது. நெடுங்கணக்கை உணர்த்தும் ஆங்கில 'Alphabet' என்பதோ சமஸ்கிருத 'அரமாலா' என்பதோ தமிழ் நெடுங்கணக்கு உணர்த்தும் பொருளுடையன அல்ல.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...


## போராட்டக்காரர்களை எதிர்கொள்ள...

அதிகார ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்ததால், பதவி காலம் முடிவடைய இன்னும் இரண்ட வரை வருடங்கள் எஞ்சியுள்ள நிலையில் ஜூலை 14 ஆம் திகதி அவர் பதவி விலகினார். வெளிநாட்டுக்கு தப்பியோடிய பின்னரே பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருந்தார். இதனால் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு, நாடாளுமன்றம் வசமானது. இதன்படி ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுபவர்களின் வேட்புமனுக்கள் ஜூலை 19 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப் பட்டன.

### இரகசிய வாக்கெடுப்பு

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றம் புதன்கிழமை கூடியது. இரகசிய வாக்கெடுப்பில் 134 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக



தெரிவுசெய்யப்பட்டார். செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கும் மேல் ரணில் பெற்றதால், அடுத்த தேர்வுகளுக்கு செல்ல வேண்டிய தேவை எழவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுயாதீன அணிகள், மொட்டு கட்சியின் ஒரு பிரிவு தமது ஆதரவை டலஸ் அழகப்பெருமவுக்கு நேற்று வெளிப்படுத்தியிருந்தன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி, தேசிய காங்கிரஸ், சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பன ரணிலுக்கு ஆதரவளிக்கபோவதாக அறிவித்திருந்தன என்பன குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியல் வரலாற்றில் 1993 இல் ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு நாடாளுமன்றம் வசமானது. பதில் ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜேதுங்க ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு எதிராகப் போட்டியிட அப்போது யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது இதுவே முதன்முறையாகும்.

### ரணில் முன் உள்ள சவால்கள்

ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்க முன்பாக உள்ள சவால்கள் பல. அதனை அவர் எவ்வாறு சமாளிக்கப்போகின்றார் என்பதில்தான் அவரது உண்மையான வெற்றி தங்கியுள்ளது. முதலாவதாக – பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கின்றது. பல குடும்பங்கள் மூன்று நேரமும் உணவருந்த முடியாத நிலையில் இப்போதுள்ளன. இதற்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பது பிரதான பிரச்சினை. அதிகரித்த வாழ்க்கைச் செலவு ஒருபுறம். வேலை இழப்புக்கள் மறுபுறம் அனைத்துக் குடும்பங்களையும் பாதிக்கின்றது.

ரணில் ஜனாதிபதியாக வந்திருந்தாலும் ரணிலுக்கு எதிரான தமது போராட்டம் தொடரும் என காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளார்கள். இது ரணில் எதிர்கொள்ளவேண்டியுள்ள மற்றொரு பிரச்சினை. இதனைப் படைப்பலத்தில் மூலம் எதிர்கொள்வது என்ற ரணிலின் முடிவு பாரதூரமான விளைவுகளைக்கொண்டுவரக்கூடியது. பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெற்று இந்தப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் உபாயத்தை ரணில் கையாண்டிருக்க முடியும்.

இதனைவிட சர்வதேச உதவிகளைப் பெற்று பொருளாதாரத்தை மீளக்கட்டியமைப்பது அவசியம். இதனை செய்யக் கூடிய ஒருவராகவே ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை மக்கள் பார்க்கின்றார்கள். சர்வதேசத் தொடர்புகள், மேற்கு நாடுகளுக்கு சார்பான அவரது அணுகுமுறை என்பன இவ்விடயத்தில் அவருக்கு உதவலாம். சர்வதேச நாயண நிதியம் ரணிலின் தெரிவையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கை அவருக்கு உற்சாயமளிப்பதாக அமையலாம்.








சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# வாய்ச் சொல்லில் வீரரடி

மனிதர்கள் இயல்பாகவே கதை கேட்பதில் ஆர்வம் உடையவர்கள். தூங்கிக் கொண்டிருப்பவனை எழுப்ப வேண்டுமெனில், "ஒரு ஊர்ல".'என ஆரம்பித்தால் போதும். கதை கேட்க சட்டென காதுகள் விழித்தெழுந்து விடும். மனிதனின் மழலைக் காலம் முதல், கடைசி காலம் வரை கதைகளுக்கான ஒரு தேடல் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

இந்த மனித இயல்பைப் பயன்படுத்தித் தான் பல கதை சொல்லிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள். சிலர் நல்ல நீதிக் கதைகளையோ, வாழ்வியல் கதைகளையோ சொல்லி மக்களை நல்வழிப்படுத்துகின்றனர். இவர்கள் நம் பிரியத்துக்குரியவர்கள்.

வேறு சிலர், வாயாலயே வடை சுட்டு, காலமெல்லாம் கதை விட்டு வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் பெரிய பெரிய இருக்கைகளில் அமர்ந்து கொண்டு பிறரை எரிச்சலடையச் செய்பவர்கள். இவர்கள் வாய்ச் சொல்லில் வீரர்கள் ! நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, யாராவது உங்கள் மனதில் வந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை விஷயம் அவர்கள் செயலில் வலுவற்றவர்கள் என்பது தான். ஒருவர் செயலில் எந்த அளவுக்கு பலவீனமாக இருக்கிறாரோ அந்த அளவுக்கு வாயால் வடை சுடுவதில் வல்லவராக இருப்பார். இதை நம் எல்லா இடங்களிலும் பார்க்கலாம்.



அலுவலகங்களில் நமது உயரதிகாரிகளில் சிலர் அந்த வகையில் தான் வருவார்கள். நிறுவனத்தை தலைகீழாய் நிறுத்தப் போகிறேன், நாம் எல்லோரும் இணைந்து இப்படி செயல்பட வேண்டும், அப்படி செயல்பட வேண்டும்ன்என்றெல்லாம் பேசித் தள்ளுவார்கள். புதிதாக வந்திருக்கும் பணியாளர்கள், தங்கள் நரம்பு புடைக்க அதையெல்லம் கேட்பார்கள். காரணம் அவர்களுக்கு அது புதிது! ஏதோ புதிய நிறுவனம் பிறக்கப் போகிறது என அவர்கள் உண்மையிலேயே நம்பிவிடுவார்கள்.

காலப் போக்கில் அந்த புதிய பணியாளர்களுக்கு உண்மை நிலமை புரிந்து விடும், பிறகு அவர்கள் கடைசி இருக்கையில் உட்கார்ந்து கடலை கொறித்துக் கொண்டே அந்தப் பேச்சை வேடிக்கை பார்ப்பார்கள். அப்போது புதிதாக வந்தவர்கள் முதல் இருக்கையில் விழிகள் விரிக்க பேச்சைக் கேட்டு மூச்சைப் பிடிப்பார்கள்.

இந்த வாய்ச்சொல் வீரர்கள் ஏட்டுச் சுரைக்காய்கள். அதைக் கொண்டு சமையல் செய்ய முடியாது. அப்படிப்பட்டவர்களைப் பார்த்தால் நாம் பரிதாபப் படவேண்டும். 'பாவம் ஒண்ணும் செய்யத் தெரியாதவன், பேசியே பொழைப்பை ஓட்டுகிறான்' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அலுவலகத்தில் மட்டுமல்ல, அரசியல் இருக்கைகளிலும் நாம் இத்தகையோரைப் பார்க்கலாம். அதிகாரத்துக்கு வரும் முன் இவர்கள் பேசுவதைக் கேட்டு வியந்து போயும், மிரண்டு போயும் மக்கள் வாக்குகளைக் கொட்டுவார்கள். எந்த அளவுக்கு ஓவரா பேசுகிறார்களோ அந்த அளவுக்கு செயலில் வீக் ஆக ஒதுங்கி விடுவார்கள். இது வரலாற்று உண்மை !

இன்னொரு விஷயம், அதிகமாய்ப் பேசுபவர்கள் பிறர் மேல் பழி போடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். 'இவ்ளோ பேசறியே.. என்ன மாற்றம் வந்துச்சு' என யாராவது கேட்டால்" இந்த அலுவலகத்தில் முன்னால் வேலை செய்த பணியாளர்கள் நாசம் பண்ணி வெச்சுட்டாங்க. அதனால தான் இப்படி இருக்கு. என்னோட திட்டத்தை இங்கே



செயல்படுத்த பலர் முட்டுக் கட்டை போடறாங்க. அதனால தான் நாம இப்படி இருக்கோம் என்றெல்லாம் பழியை சகட்டு மேனிக்கு தூக்கி அங்கும் இங்கும் எறிவார்கள்.

அதிகார இருக்கைகளிலும் இதே நிலை தான். எதிரி நாட்டின் சதி என்றோ, எதிர் அணியினரின் சதி என்றோ, முன்னால் இருந்தவர்களின் வேலை என்றோ பழியைத் தூக்கி அடுத்தவர் மீது போட்டுக் கொண்டே இருப்பார்கள். தனது மிகப்பெரிய பலவீனத்தைக் கூட, பலம் என பறைசாற்ற மூச்சு விடாமல் பேசுவார்கள். அதற்கென ஒரு கூட்டத்தையும் சேர்த்துக் கொள்வார்கள்.

ஒருவர் அதிகமாகப் பேசி பழியைத் தூக்கி வழியில் வருபவரின்

17 ஆம் பக்கம் பார்க்க...




FRESH BARBER LÜDENSCHEID

Fresh BARBER

ஆண்கள் பெண்களுக்கான
எங்கள் சிகை அலங்காரம்
உங்களை அழகின்
சிகரத்தில் ஏற்றிவிடும்.

Fresh BARBER



FRESH BARBER LÜDENSCHEID
Werdohler Str.86
58511 Lüdenscheid.Germany
Tel:02351 894 81 23

Öffnungszeiten: Di-Fr: 9.00-18.30 Uhr | Sat.8.00-16.00 Uhr

# வாய்ச் சொல்லில் வீரரடி



தலையில் போடுகிறார் எனில், அவர் உதவாக்கரை என புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும். காரணம், செயல்படுபவர்கள் பேச்சைக் குறைப்பார்கள். பேசித் தள்ளுபவர்கள் செயலைக் குறைப்பார்கள்.

உளவியல் சொல்லும் இன்னொரு உண்மை என்ன தெரியுமா ? பேசுபவர்கள் தன்னம்பிக்கை குறைவான வர்கள். தங்களுடைய இயலாமையை மறைக்க எதையாவது பேசிக்கொண்டிருப் பார்கள். இவர்கள் ஒருவகையில் அறிவுக் குறைபாடு உடையவர்கள் !

நாம் சந்திக்கும் பலர் அப்படித் தான் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை தோண்டிப் பார்த்தால் ஒரு பலவீன மனிதராக அவர் இருப்ப தைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அவர்களோ உலகில் தங்களுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை என்றே சாதி ப்பார்கள். தெரியாத்தனமாக ‘உங்களுக்கு தெரியாது‘ என அவர்களிடம் சொல்லி விட்டால் தங்களுக்குத் தெரியும் எனும் பிம்பத்தை நிலை நாட்ட பேசியே சாவடி ப்பார்கள்.

பேசிக்கொண்டே இருக்கும் வார்த் தைப் போராளிகள் வாழ்க்கையில் எந்த ரிஸ்கையுமே எடுக்க மாட்டார்கள். வாயால் தோரணம் கட்டி நம்முடைய கற்பனைக்குள் ஒரு சுவர்க்கத்தையே கட்டி எழுப்புவார்கள். நிஜத்தில் ஒரு குடிசையைக் கூட வேய மாட்டார்கள்.

வாய்ச்சொல் வீரர்கள் ஒரு விஷயத்தை ஏன் செய்யவில்லை என்பதற்கு ஆயிரம் காரணங்களை அடுக்குவார்கள். ஆனால் எப்போதுமே செய்ய மாட்டார்கள். ஆனால் செயல் வீரர்கள் ஏன் செய்யவில்லை என்பதற்கான நிஜ காரணத்தைச் சொல்லி, அதைச் செயல்படுத்தும் வழிகளை யோசிப்பார்கள்.

வாய்ச்சொல்லில் வீரர்களாய் இருப்பவர்களால் நாடோ, அலுவலகமோ, வீடோ எந்த நன்மையுமே அடையப் போவதில்லை ! அதனால் தான் நிறுவனங் கள் பணியாளர்களை மூன்று விதமாக வகைப்படுத்தி வைக்கின்றன.

முதல் வகையினரை, திங்கர்ஸ் அதாவது சிந்தனையாளர்கள் என்கிறது. இவர்கள் மிக நேர்த்தியாக சிந்திப்பார்கள். நிறுவனத்தை முன்னேற்ற என்ன செய்ய வேண்டும் ? எவற்றையெல்லாம் புதிதாக நிறுவ வேண்டும். என்னென்ன மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் ? எப்படி தொழில்நுட்ப உலகில் உள்ள புதிய விஷயங்களை நிறுவனத்தில் செயல்படுத் தலாம் ? என்றெல்லாம் யோசிப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் இன்னோவேஷன் எனப்படும் பிரிவில் வேலை பார்ப்பார்கள்.

இரண்டாவது வகையினர், டூயர்ஸ் அதாவது செயல்படுத்துபவர்கள் என் பார்கள். முதல் வகையினர் சிந்திக்கி ன்ற விஷயங்களைச் செயல்படுத்துவது இவர்கள் பணி. இவர்கள் நிறுவனத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். இவர்கள் தான் புதியவற்றைக் கட்டியெழுப்புவ திலும், நிறுவனத்தின் வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் பெரும் பங்கு வகிப் பார்கள்.

மூன்றாவது வகையினர் இந்த டாக் கர்ஸ், அதாவது பேசுபவர்கள். இவர்களு க்கு தொழில் நுட்பத்திலும் அதிக பிடி ப்பு இருக்காது. சிந்தனையிலும் அதிக தெளிவு இருக்காது. ஆனால் எல்லாமே தனக்குத் தான் தெரியும் என்பது போல பேசித் திரிவார்கள். பெரும்பாலும் இவர்களுக்கு மொழிப் புலமை இருக்கும். இவர்கள் கொஞ்ச மேனும் செயல்படும் இடமெனில் அது சேல்ஸ் எனப்படும் விற்பனை பிரிவு தான். எதையும் விற்று விடும் திறமை அவர்களுக்கு உண்டு. வாய்ச்சொல் வீரர்கள் இவர்கள்.

ஒரு மாதத்தின் முடிவிலோ, ஒரு ஆண்டின் முடிவிலோ ‘நீங்கள் செய்த தையெல்லாம் பட்டியலிடுங்கள்‘ என்றால், பேசிப் பேசியே வாழ்க்கையை ஓட்டு பவர்களுக்கு சொல்ல எதுவுமே இருக் காது. காற்றில் புரட்சிப் போர் விதைத்த அவர்களுடைய பயணம் ஒரு வீணடிக்கப் பட்ட காலமாகவே முடிந்திருக்கும்.

ஆனாலும் அவர்கள் பேச்சை நிறுத்த மாட்டார்கள். அடுத்த ஆண்டு எல்லாம் சரியாகும் என்பார்கள். அல்லது, மற்றவ ர்கள் சிறப்பாய் செயல்படக் காரணம் நான் தான் என்பார்கள்.

இன்றைக்கு தொழில் நுட்ப உலகம் வாய்ச்சொல் வீரர்களுக்கு நல்ல களங்களை அமைத்துக் கொடுத்திருக் கிறது. பேஸ் புக் போராளிகளாகவும், இன்ஸ்டாகிராம் கில்லாடிகளாகவும், வாட்சப் வீரர்களாகவும் அவர்களை உருவாக்கி வைத்திருக்கிறது. அத்தகை ய வாய்ச்சொல் வீரர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது அவசியம்.

நம்மைச் சுற்றியோ, நம் அலுவலக த்திலோ, நம் நண்பர் வட்டாரத்திலோ இப்படிப்பட்ட வாய்ச்சொல் வீரர்கள் இருந் தால் நாம் அவர்களை உதாசீனம் செய்ய வேண்டும். குறைந்த பட்சம் அவர்க ளுடைய வாய் வலையில் விழாமலேனும் தப்பிக்க வேண்டும்.

அதே போல நாம் வாய்ச்சொல் வீரர்களா என்பதை ஒரு முறை சிந்திப் போம். அப்படியெனில் அதன் காரணம் நமது திறமையின்மையா என யோசிப் போம். அந்த திறமையை வளர்த்துவோம். நிறைகுடம் தளும்பாது, காலி குடம் அமைதியாய் இருக்காது எனும் உண்மை உணர்வோம்.

## சமநிலை!



அராலி



சித்தங்கேணி

எரிபொருள் இல்லை,
மின்சார வெட்டு,
ஆனால் எதற்கும்
பழக்கப்பட்டவர்கள்
தங்கள் வாழ்வின்
சமநிலையை
எப்படிப்
பேணுகிறார்கள்
என்பதைக்காட்டும்,
பேசும் படங்கள்.

**படங்கள்: வெற்றிமணி**

**இடங்கள் : தாயகத்தில் அராலி, சித்தங்கேணி,**





லூட்ஸ் மாதா புனிதப் பயணம் 2022

July, August மாதங்களில்

எமது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க
பஸ் மூலம் செல்ல ஒழுங்கு செய்து உள்ளோம்.
எமது சேவையின் சிறப்பை முன்னர்
பயணித்தவர்கள் நன்கு அறிவர்.
பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு: 02972 7754
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489





# பெண் சாதுக்கள்!
## உருவாக்கும் ஆண் அதிகாரிகள்

அப்பா வந்தால் அடிக்கப் போறார். அப்பா வந்து கத்தப் போறார். அப்பா கண்டாரெண்டல் கொல்லப் போறார். மனுசன் வந்து சதிராடப் போகுது. பிள்ளைகளின் கல்வி, குறும்பு குழப்படி போன்ற அனைத்திலும் திருப்தியின்மை தோன்றும் போது அதிகளவான அம்மாக்களால், முக்கியமாக எம்மினத்தவர்களால் இன்று வரை பயன்படுத்தப்படும் இந்த வாக்கியப்பிரயோகங்கள், பற்றிய குழப்பம் எனக்குண்டு. அப்பா வந்தால் அடிக்கப்போகும் அந்த விடயத்துக்கு அம்மாவால் ஏன் அடிக்க முடியாது. (அடிப்பது சரிஎனச் சொல்லவில்லை. தண்டனை என்பது அடிப்பதும் உதைப்பதுமல்ல.தவிரவும் தண்டிப்பதால் கிடைப்பது எது என்பது பற்றி வேறோர் பதிவில் என் மனக்கிடக்கைகளைப் பதிவிடலாம் என இருக்கிறேன்.) அப்பா வந்து கத்தப்போகும்விடயத்துக்கு அவர்வருமுன்னமே ஏன் அம்மாவால் கத்த முடியாது. (கத்துவது சாதிக்குமா கதைப்பது சாதிக்குமா) அப்பா கண்டாரெண்டல் கொல்லப்போகும் விடயத்துக்கு அதை முதலில் கண்ட அம்மா கொன்றால் என்ன (கொல்வது என்று முடிவெடுத்து விட்டபின் அதை யார் செய்தால் தான் என்ன. பிள்ளை என்பது என்ன உயிரா உணர்வா, என்ர பிள்ளை நான் அடிப்பன் கொல்லுவன் ஆர் கேட்க முடியும் என்று சொல்லும் பெற்றோரின் பொருளை எவர் கொன்றால் தான் என்ன ) மனுசன் வந்து சதிராடப் போகுதெனத் தெரியும் விடயத்துக்கு, அதற்கு முதல் தானே சதிரோ சாமியோ ஆடிமுடித்தால் என்ன.

மாலினி மாலா
(யேர்மனி)

இவற்றின் மூலம் எவற்றை உணர்த்த முயல்கிறார்கள். அப்பா என்பவர் பொல்லாதவர் ஆதிக்க சக்தி அதிகாரமும் ஆக்ரோசமும் அடக்கு முறையும் கொண்டவர் என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்தும் போது, குழந்தையிலேயே அவர்களுக்குள் ஏற்படும் மன இடைவெளிகள் பின்னெப்போதும் நெருங்கிய ஒரு நட்புணர்வுக்குள் இணைந்து கொள்ள முடியாமல் நெஞ்சுக்குள் நேசத்தைப் பொத்திக்கொண்டு நெருங்காமல் நொறுங்கும் நிலைக்குத் தள்ளி விடாதா. இன்னொன்றும் கூட நடக்கும். அப்பாவின் கத்தலில் இருந்து பிள்ளைகளைக் காப்பதாக அணைத்துக் கொண்ட சாமர்த்தியம் வயோதிபத்தில் தனித்துப் போகும் அம்மாக்கள் இலகுவில் பிள்ளைகளோடு சேர்ந்து வாழவும், அப்பாவிலிருந்து அம்மாவின் வார்த்தைகள் தூரமாகப் பிரித்து வைத்த இடைவெளி அப்பாவின் இறுதிக் காலத்தில் தனிமைக்குள் தள்ளிக் கொல்லும் தண்டனையும் கொடுக்கும். எவ்வளவோ மென்மையும் நிதானமும் பொறுப்பும் பிள்ளைகளோடு நட்புப் பேண முயலும் தந்தைகளையும் இந்தக் கொடுமையான நிலைக்குத் தான் தள்ளி விடுகிறது பல அம்மாக்களின் தப்பிக்கொள்ளும் சாமர்த்தியம் அது போதாதுக்கு, அண்ணன் வரட்டும் சொல்லுறன், சித்தப்பன் வரட்டும், பெரியப்பன் வரட்டும் மாமன் வரட்டும் மண்ணாங்கட்டி வரட்டும் என்ற மிரட்டல்கள் வேறு பிள்ளைகள் மீது ஏவப்படும் போது பெண் குழந்தை சிறுவயதிலேயே ஆண் என்பவன் அதிகார சக்தி ஆதிக்க சக்தியாக எண்ணி ஒடுங்கவோ, அன்றி எதிர்க்கவோ முற்படுகிறது.

கூடவே ஆண்குழந்தைகள் ஆண் என்பவன் மட்டுமே அதட்டிக்கேட்கும் உரிமை கொண்டவன் என்பதாகவும். ஏதொன்றையும் அதிகாரத்தின் மூலம் ஆளும் உரிமை தனக்கே உள்ளதாகவும், முடிவெடுக்கும் சக்தியும் அறிவும் தன்னிடமே உள்ளதாகவும் எண்ணத் தலைப்படுகின்றன. இந்த அம்மாக்களுக்கு ஏற்றாப் போல, கத்துவதும், கொல்வதும் சத்திராடுவதும், அடிப்பதும் தான் கொண்டிருக்கும் உறவு முறையின் தலையாய கடமைகளில் ஒன்றாக எண்ணிக்கொண்டிருக்கும் அப்பாகளும், இல்லாமலில்லை. எந்த ஒரு விடயத்தையும் அமைதியாக இருந்து பேசுவதோ நிதானமாகப் பிள்ளையைச் சிந்திக்கத் தூண்டுவதோ அன்றி தாய்க்கும் பிள்ளையின் செய்கைகளில் முடிவெடுக்கும் செயற்படுத்தும் உரிமை உள்ளது என்பதைத் தவிர்த்து அனைத்தும் என் ஆதிக்கத்துக்கு உட்பட்டது என அவசியமே இல்லாமல் ஆடித்தீர்ப்பது. என்னைப் பொறுத்தவரை இந்தக் குணவியல்பின் அடிப்படையே தாழ்வு மனப்பான்மையின், தன்னம்பிக்கையின்மையின் வெளிப்பாடு எனத்தான் கொள்வேன். எம்மால் பேசிப் புரியவைக்க முடியாத போது, விடயத்தைப் புரிந்து,அல்லது அறிந்து கொண்டு அதற்கேற்ப வினையாற்ற முடியாத போது, எம்மையே எம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் தகமை இல்லாத போது எமது அதிகாரத்தின் மூலம், அதை அங்கீகரிக்கும் உறவு முறையின் கிரீடத்தைச் சூடிக்கொண்டு அடக்கவும் அடிக்கவும் கத்தவும் என அனைத்து வன்முறைகளையும் பிரயோகிக்க முயல்கிறோம் யோசித்துப்பார்த்தால் எந்த ஒரு ஆதிக்க, அதிகாரமும் வன்முறையும் நேசத்தையும் நெருக்கத்தையும் உடனிருப்பையும் பேணுவதேயில்லை நாடுகளிலாகட்டும் வீடுகளிலாகட்டும். சமத்துவமும் புரிதலும் நேசமும் பேணாத மனிதர்களை காலம் கனமாகத் தண்டித்துத்தான் விடுகிறது ■



# இன்னுமொரு தேத்தண்ணி கேட்கலாம் போல!

ஒரு வேளைப்பளு நிறைந்த கடுமையான வெள்ளிக் கிழமை, வேலை முடித்து வீட்ட வர, "தேத் தண்ணி போடவா" மனிசி கேட்டா". இது தான் சரியான தருணம், மண்டைக்குள் மெஸேஜ் வந்தது. "போட்டா நல்லம், போடாட்டியும் பரவாயில்லை, கஷ்டப்படாதேயும்" கார் திறப்பையும் ிாழநெ ஐயும் மேசையில் வைத்து விட்டு, கண்களில் கவலை கலந்து, அவாவை பார்த்தேன். "ஏன் ஒரு மாதிரியா இருக்குறீர்" கேத்தலில் தண்ணி நிரம்ப தொடங்கியது சாச்சா ஒன்றும் இல்லை" பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தேன் "வேலையில் என்னவும் பிரச்சினையோ" கேத்தலிற்கு ஸ்விட்ச் போட்டாச்சு "...இல்லை" முகத்தில் எந்த சலனமும் காட்டவில்லை "இந்தியா தோத்தது கவலையோ" நக்கல் தொனித்தது. "உமக்கென்ன விசரே" சலித்துக் கொண்டேன். "அவங்க தோத்தா எனக்கென்ன" "யாழ்ப்பாணத்தில் என்னவும் பிரச்சினையோ?" தொனியில் அக்கறை எட்டிப் பார்த்தது "அங்க என்ன நடந்தா எங்களுக்கென்ன" தேயிலையில் சுடுதண்ணீர் இறங்கிக் கொண்டிருந்தது "அப்ப என்னென்று சொல்லுமன்" சுடுதண்ணீரில் தேயிலையை தோய்த்து எடுத்தா".



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

"இல்ல எங்கட சென் ஜோன்ஸ் batch ngbas get together ற்கு வரட்டாம்" நைஸாக போட்டேன் "போன வருஷம் தானே டிபை matchற்கு போனீர்" தேயிலை டியப குப்பை தொட்டியில் தொப்பென்று விழுந்தது "---------" மௌனம் "இப்ப என்ன ஆட்டத்திற்கு போக போறியள்" சீனி டப்பா டக்கென்று திறந்தது "45 வருகுதாம்" குரலில் கவலை தோய்த்து "உம்மை விட்டிட்டு போக எனக்கும் விருப்பமில்லை தான்" "நல்லா நடிப்பீர்" சீனிக் கரண்டி தேத்தண்ணியில் இறங்கியது "எல்லாரும் போறாங்கள்" காட்டி கொடுப்பு தொடங்கியது. "கிரிஷாந்தன், வாதுலன், ஆதி, சத்தி, நகு, கஜன்.. .... ■

30 ஆம் பக்கம் பார்க்க...

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
R.Ragunathan
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
கேர்வலார் தேவாலய திருப்பூசை 13.08.2022 சனிக்கிழமை அன்று ஆலய வளாகத்தில் எமது அதிரடி மலிவு விற்பனை!




TEMPO Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை Hückelhoven

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6 50126 Bergheim Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240





# நமது கண்களால் நிகழ்காலத்தைத் தானா பார்க்கின்றோம்?



# சூரியன் அழிந்துவிட்டால் நமக்கு 8 நிமிடங்களுக்குப் பின்பு தான் சூரியன் இல்லாமல் போனதே தெரியவரும்

நாம் நிகழ்காலத்தில் வாழ்கின்றோம் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. இப்படி நிகழ்காலத்தில் வாழும் நாம் நமதுகண்களாலும் நிகழ்காலத்தைத்தானா பார்க்கின்றோம்? என்ன வழக்கம் போல் உங்கள் எல்லோரையும் குழப்பஆரம்பித்துவிட்டேனா? இல்லை நண்பர்களே, நான் கேட்கும் கேள்விக்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. நிகழ்காலத்தில்வாழும் நாம் நமது கண்களாலும் நிகழ்காலத்தைத்தானா பார்க்கின்றோம்? இதை என்னிடம் கேட்டால், நான் இல்லை என்று தான் கூறுவேன். நிகழ்காலத்தில் வாழும் நாம் நமது கண்களால் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டும் தான்பார்த்துக்கொண்டிருக்கிறோம்! அட, அது எப்படி முடியும் என்று நீங்கள் கேட்டால், தொடர்ந்து படியுங்கள்".

நமது கண்களால் ஒரு பொருளைப் பார்ப்பது என்றால் என்ன? உதாரணத்திற்குச் சூரியனில் இருந்து அனுப்பப்பட்டஒளி, பூமியில் நமது சுற்றுப்புறத்தில் உள்ள எதாவது ஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடையும்போது, அந்தப் பொருள் நமக்குத் தெரிகின்றது என்கிறோம். ஆனால் இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒளிஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் எடுக்கும்.

ஒளி ஒரு நொடியில் ஏறத்தாழ 300,000 km தூரம் செல்கிறது. ஆகவே, இந்த ஒளி ஒரே ஒரு நொடியில் மட்டுமேபூமியிலிருந்து சந்திரனுக்குச் சென்றுவிடும். அதேபோல் ஒளி ஒரே ஒரு நொடியில் நமது புவியை 7 தடவைகளுக்கு மேல்சுற்றிவிடும். ஏன், தற்போது புவியில் காணப்படும் அதிவேக ஏவூர்தி (Rocket) கூட ஒரு நொடியில் 15 km மட்டும் தான்செல்கிறது. உண்மையைச் சொல்லப்போனால் ஐன்ஸ்டைனின் சார்பியல் கோட்பாட்டின் (Theory of Relativity) அடிப்படையில் ஒளியின் வேகம் தான் இந்தப் பிரபஞ்சத்தின் வேக எல்லையாகும். எனவே, ஒளியின் வேகத்தை நம்மால்கற்பனை கூடப் பண்ண முடியாது.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

இப்படி கற்பனையே பண்ணமுடியாத இந்த ஒளியின் வேகம், பூமியில் இருக்கும் வரை தான் பிரம்மாண்டமாக இருக்கிறது. விண்வெளியிலோ இந்த வேகம் மிகவும் சிறிதாகிவிடும். உதாரணத்திற்குச் சூரியனைஎடுத்துக்கொள்வோம். பூமியில் இருந்து சூரியன் 149,600,000 km தூரத்தில் இருக்கிறது. ஆகவே, சூரியனில் இருந்துபுறப்படும் ஒளி நமது பூமியை வந்தடைய ஏறத்தாழ 8 நிமிடங்கள் எடுக்கின்றது. என்ன 8 நிமிடங்களா? அப்படி என்றால்நாம் மேலே பார்க்கும் அந்தச் சூரியன் உண்மையில் 8 நிமிடங்களுக்கு முன்பு இருந்த சூரியன் தானா? ஆமாம், நாம்எப்போதுமே 8 நிமிடங்களுக்கு முன்பு இருந்த சூரியனைத் தான் மேலே பார்க்கின்றோம். ஏன், இதோ இந்த நொடியில்கூட அந்தச் சூரியன் அழிந்துவிட்டால் நமக்கு 8 நிமிடங்களுக்குப்பின்பு தான் சூரியன் இல்லாமல் போனதே தெரியவரும்.

எனவே, மேலே குறித்தது போல் ஒளியின் வேகம் காரணத்தால் ஒளி ஒரு பொருளில் பட்டுத் தெறித்து நமது கண்களை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரம் எடுக்கும். இப்போது புரிகிறதா ஏன் நாம் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டுமேநமது கண்களால் பார்க்கின்றோம் என்று? இல்லையா? சரி பரவாயில்லை, இந்த விஷயத்தை இப்படிப் பார்ப்போம். உங்களுக்கு முன்னால் உங்கள் நண்பன் ஒருவன் 1 மீட்டர் தூரத்தில் நிற்கிறார் என்று எடுத்துக் கொள்வோம். அவரை நாம்நமது கண்களால் பார்க்க வேண்டும் என்றால், ஒளி அவரில் பட்டுத்தெறித்து நமது கண்களை வந் தடையவேண்டும். குறிப்பாக ஒளி அவரில் பட்டுத்தெறித்து சரியாக 1 மீட்டர் தூரம் சென்று நமது கண்களை அடைந்தால் மட்டும் தான்நமக்கு அவரைத் தெரியும். அப்படியென்றால் ஒரு நொடியில் 300,000 km (அல்லது 300,000,000 மீட்டர்) தூரம்செல்லும் ஒளி, 1 மீட்டர் செல்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? ஒளி ஒரு மீட்டர் செல்வதற்கு கிட்டத்தட்ட0.000000003 நொடி எடுக்கும். சரி சரி, 0,000000003 நொடி என்றால் நம்மால் உணரக்கூட முடியாத ஒரு குறுகியநேரம் தான், இருந்தாலும் அதுவும்ஒருநேரம்தானே? எனவே, 1மீட்டர் தூரத்தில் நிற்கும் உங்கள் நண்பனின் உருவத்தை 0,000000003 நொடிக்குப் பின்பு தான் உங்களது கண்களுடன் காண்கிறீர்கள். அதாவது, அந்த நண்பனின் உருவம் நிகழ்காலத்தில் இருந்தாலும், நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கும் அந்த உருவம் இறந்தகாலத்தில், குறிப்பாக 0,000000003 நொடிக்கு முன்பு இருந்த உருவமாகத் தான் இருக்கிறது.



நண்பர்களே, எந்த ஒரு பொருளை எடுத்துக்கொண்டாலும், அது எவ்வளவு தூரத்தில் இருந்தாலும்,

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# வெற்றிக்கனி பறித்தவருக்கு அகவை 70

08.07.2022

அன்பெனும்
ஒற்றைச் சொல் அகிலத்தை
இணைக்கும், செந்
தமிழெனும்
அன்புக்குள் ஆனந்தம்
செழிக்கும் !

அன்பினையும்
தமிழினையும் இருகண்ணாய்
கொண்டு, வாழ்
தந்தையவர்
வாழ்வுதனை வானகமும்
வணங்கும்.

உறவுகளின்
மேன்மையினை உலகிற்கே
உரைத்து, பெரும்
நேசத்தின்
பெருமழையாய் இதயத்தை
நனைத்து !

வாழ்வினிலே
வாய்மையினை நாளெல்லாம்
நினைத்து, செல்
வழியெங்கும் தூய்மையினை
செயலாக வடித்தீர் !

தாயகத்தின்
கனவுகளை விழிகளிலே
சுமந்து, பெரு
நம்பிக்கை
கதிரொளியாய் அயலகத்தில்
நடந்து,

இலக்கியத்தின்
இழைகளிலும் இனிமையினைக்
கலந்து, வெற்றி
மணியொலியாய்
விடியலுக்கு அழைப்பொலியை
கொடுத்தீர் !

சொல்லோடும்
செயலோடும் இளமையினை
இறைத்து, தன்
நரையோடும்
அனுபவத்தில் துயரங்கள்
மறைத்து !

ஊரோடும்
உலகோடும் மனிதத்தை
விதைத்து, தான்
செல்கின்ற
வழியெங்கும் நன்மையினை
அளித்தீர் !

எழுவதற்கு
கரம்தன்னை எப்போதும்
கொடுத்து, தன்
எழுபதாம்
வயதினிலும் எளிமையினை
எடுத்து !

உலகிற்கு
நல்வழியை காட்டியதை
நினைத்து, எம்
கரம் கூப்பி
வணங்குகிறோம் வாழ்த்துமாலை
தொடுத்து !

இறையவனின்
நிறைவரங்கள் எப்போதும்
அடைந்து, உம்
துணையவளின்
இணையாக நூறாண்டைக்
கடந்து

வாழ்கவென
வாழ்த்துகின்ற நெஞ்சங்கள்
மலர்ந்து, நீர்
குறைவின்றி
நாளெல்லாம் வாழ்கவென்போம்
மகிழ்ந்து !

**இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்**

**அன்புடன் சேவியர் தமிழ்நாடு.**



அகவை எழுபதில் கால் பதிக்கும் கண்ணா,
எம் அண்ணா! ஆட வல்லாளனின் அன்புக்குமரா,
இளைஞர்களின் தென்றல் நீ,
முதியவர்களின் நெல்லிக்கனி நீ,
ஈய்வதில் கர்ணனும் நீ,
உவகையோடு எந்நாளும் எம் தமிழோடு உறவாடி
கலை என்ற மணிகளை விதைக்கும்
கலைஞானமணியே!
படைப்புக்களை இலக்கிய உலகுக்கு
தந்திடும் பிரம்மாவே! முக்கனி சுவைத்தரும்
வெற்றிமணிப்பத்திரிகையின் முதல்வரரே
அன்பெனும் தேனே,எம் உள்ளமெலாம்
நிறைந்திருக்கும் உணர்வே
ஜெயம் பல கண்டவனே
ஜெயபவானியுடன் பல நூறாண்டுகள்
இப் பூ உலகில் இன்புற்று வாழ
இறை அருளுடன் வாழ்துகிறோம்.



**அன்புடன்**

**சகநாயகன் சக்தி,**

**ஜெயா–யேர்மனி**

உன் கைகளுக்குள் அடங்கிப்
போகும் தூரிகையாக
உன் வார்த்தைகளுக்குள் உறைந்து
போகும் உணர்வுகளாக
உன் எண்ணங்களை
ஆக்கிரமிக்கும் தேவதையாக
இருக்கவே நான் விரும்புகிறேன்.



யுத்தத்துக்குப் போகும் போராளியாக
நீயும் எத்தனை பேரை
உன் தூரிகையால் கொன்று குவித்தாய்.

உன்னைச் சுற்றிச் சுழலும்
ஆத்மாக்களுக்கு
உன் தூரிகையால் மட்டுமே
மோட்சம் கொடுக்க முடியும்
எனக்குள் கரைந்து போன கலைஞனே
நீ எப்படி இருப்பாய் என்று எனக்கு தெரியாது
தெரிந்து கொள்ளவும் நான் விரும்பவில்லை
உன் குரல் என் காதுகளில் ஒலிப்பதைக் கூட
நான் விரும்பவில்லை
உன் தூரிகையோடு
மட்டுமே நான் பேசவேண்டும்
உன் விரல்களின்
சாதனைகள் மட்டுமே
என்னோடு கிசுகிசுக்க வேண்டும்



**அன்புடன்**

**கௌசி.யேர்மனி**












# இலக்கியத்தில் இவர்கள்... 24



கௌசி (யேர்மனி)

# நாட்டின் வளமும் ஆட்சி முறையும்

21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் பல்வேறுபட்ட இயற்கை அழிவுகளையும், ஆட்சி முறைகளையும், மனித மனங்களின் சீர்குலைவுகளையும் அச்சுறுத்தல்களையும், கண்டு கொண்டிருக்கின்றோம். இவற்றைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியங்களிலே இவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்கக் கூடிய ஆலோசனைகளையும் உலக வல்லுநர்களும் படைப்பாளிகளும் படைப்பது தவறில்லை. இத்தகைய இலக்கியங்களே காலந்தாண்டி வாழுகின்ற இலக்கியங்களாக காணப்படுகின்றன. வள்ளுவர் உலகம் உய்ய மனித மனங்களில் உயர்வான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக 1330 குறள்கள் தந்தார். அது இன்றுவரை உயிர் வாழுகின்றது. ஔவையார் ஆத்திசூடி கொள்றை வேந்தன் போன்றவற்றின் மூலமும் மன்னர்களுக்கு அறிவுரை கூறும் பாடல்கள் மூலமும் நற்கருத்துக்களை விதைத்துச் சென்றிருக்கின்றார். பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள் போன்றவையும் சிறந்த தத்துவக் கருத்துக்களை முன்வைத்தமையால் இன்றும் உயிர் வாழுகின்றன.

சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியம் படைத்த சிறந்த கதாசிரியரும் இயக்குனரும் தயாரிப்பாளருமான இளங்கோவடிகள் அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என 3 கருத்துக்களை வலியுறுத்தி இக்காப்பியத்தை எழுதியுள்ளார்.

தேரா மன்னா என்று விளித்து உண்மையை விளக்கிய கண்ணகி மூலம் கோவலன் கள்வன் அல்ல என்ற உண்மையை அறிந்த பாண்டியன் க்ஷிக்ஷிபொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட நானே கள்வன்;; எனக்கூறி உயிர் விடுகின்றான். மந்திரிகள் மதியுரை கோளாது, பொய்மை கொண்ட பொற்கொல்லன் சொல் கேட்டு உயிர் நீத்த பாண்டியனும் இக்கால இலங்கை அரசியல் நிலைக்கு எடுத்துக் காட்டாகின்றது. ஏதேச்சையாக நீதிவழி அரசைக் கொண்டு செலுத்தாது, தமது சுயநலத்திற்காகவும், எதிர்கால சிந்தனையில்லாது நாட்டை அழகுபடுத்துகின்றோம் என்று அளவுக்கதிகமான கடன்களை பெற்று, பெற்ற கடன்களை தீர்க்கமுடியாது திண்டாடி நாட்டை சீரழித்த தலைவர்கள் தமது தவறை உணர வேண்டும் என்பதற்கு கண்ணகிபோல்ஒருவர்முன்வரவேண்டிய நிலையில் இலங்கை நிலைமை ஏங்குகின்றது.

**பார்ப்பா ரறவோர் பசுப்பத்**
**தினிப்பெண்டிர்**
**மூத்தோர் குழவி**
**யெனுமிவரைக் கைவிட்டுத்**
**தீத்திறத்தார் பக்கமே**
**சேர்கென்று**

கண்ணகி சொன்ன தவிர்க்க வேண்டியவர்களைத் தவிர்த்து தீமை செய்தவர்கள் பக்கமே தீ சேரவேண்டும் என்பது போல் பழி செய்தவர்கள் பக்கமே தண்டனை சேர வேண்டும் என்று ஒருவர் கொதித்தெழவேண்டும்.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதனை முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்னும் பழமொழியைப் போல் கோவலன் செய்த முன்வினைப் பயனாலேயே வாளால் வெட்டுண்டு இறந்தான் என்பதை கொண்டு வந்து இளங்கோவடிகள் நிறுத்துகின்றார். இக்காவிய எடுத்துக் காட்டு யார்யார் தவறு இழைக்கின்றார்களோ அவர்கள் என்றோ நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். க்ஷிக்ஷிபடித்தவன் சூதும் வாதும் பண்ணினால் போவான் போவான் ஐயோ என்று போவான் என்று படித்தவர்கள் சூதும் வாதும் சய்தால் என்ன நடக்கும் என்பதற்கு பாரதியார் அழகாகச் சொல்லியதுபோல் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் தமக்குத் தீங்கு வரும்போது தலைவர்கள் எப்படி அழிந்து போவார்கள் என்பதற்கு இலங்கை நாடு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.



**பொன்கொண்டு இழைத்த?**
**மணியைக் கொடு பொதிந்த?**
**மின்கொண்டு அமைத்த?**
**வெயிலைக்கொடு சமைத்த?**
**என்கொண்டு இயற்றிய**
**எனத்தெரிவு இலாத**
**வன்கொண்டல் விட்டுமதி**
**முட்டுவன மாடம்**



வலிமையான மேகமண்டலத்தைப் பின்னே தள்ளிவிட்டு சந்திர மண்டலத்தை மோதுவனவான மாடிவீடுகள் பொன்னைக் கொண்டு செய்யப் பெற்றனவா? அதன்மேல் மாணிக்கங்களைக் கொண்டு மூடப்பெற்றனவா? மின்னலைக் கொண்டு அமைக்கப் பெற்றனவா? அதன்மேல் வெயிலைக் கொண்டு முலாம் பூசப் பெற்றனவா எந்தப் பொருளைக் கொண்டு இயற்றப்பெற்றன என்று ஆராய்ச்சி செய்ய முடியாதபடி உள்ளன என்று இலங்கை கட்டிடங்கள் கம்பரால் கம்பராமாயணத்திலே வர்ணிக்கப்பட்டன.

ஆனால் இன்று எப்படிக் கட்டப்பட்டன. எங்கு கடன் பெற்றுக் கட்டப்பட்டன. இது எந்த நிலைக்குக் கொண்டு வந்து முடியப் போகிறது என்று மக்கள் ஏங்கிய ஏக்கத்திற்கு இன்றைய நிலை பதில் சொல்வதாக இருக்கின்றது. எடுக்க எடுக்கக் குறையாத அட்சய பாத்திரம் அல்ல வங்கி. எடுத்தால்

28 ஆம் பக்கம் பார்க்க...





# அன்புள்ள மான்விழியே...!

**இலக்கியச் செம்மல்**
**இந்துமகேஷ் (யேர்மனி)**

“மானின் நேர்விழி மாதராய்..!“ என்று விளிக்கின்ற முன்னைய காலம் தொட்டு “அன்புள்ள மான்விழியே!“ என்று அழைக்கின்ற இந்தக் காலம்வரை மானின் விழியை மங்கையர் விழிகளுக்கு உவமை சேர்ப்பது வழக்கமாகிப் போயிருக்கிறது. முன்பின் மானைக் கண்டறியாதவனும் தனது பெண்துணையை வர்ணிக்க மானைத் துணைக்கு அழைக்கிறான். இவள்விழி மான்விழி என்பதைவிட மான்விழி இவளுடையது போலத்தான் இருக்கும் என்று தனக்குள் அவன் எண்ணிக்கொண்டிருக்கக்கூடும்.

அது சரி மான்விழி அத்தனை அழகா என்ன? காலகாலமாகச் சொல்லப்பட்டு வருவதால் அது உண்மையாகத்தான் இருக்கும்.

மான் எனக்கு அறிமுகமாவதற்கு முன்பு என் சிறுவயதில் மான்கொம்பும் அதன் தோலும்தான் அறிமுகமாகி யிருந்தது. எனக்கு அறிவு தெரிந்த நாள்முதலாக எங்கள் வீட்டுச் சுவரில் ஒரு பெரிய மான்கொம்பு இருந்தது. அது மான்கொம்பு என்றும் மான் என்பது ஆடு மாடு போல் ஒரு விலங்கு என்றும் அறிந்ததைத் தவிர அந்தவயதில் எனக்கு அதுபற்றிய மேலதிக ஆர்வம் இருக்கவில்லை. நான் பிறப்பதற்கு முன்பிருந்தே அந்த மான்கொம்பு அங்கு இருந்திருக்கவேண்டும்.அந்த மான்கொம்பு எப்படி யார்மூலம் எங்கள் வீட்டுச் சுவருக்கு வந்தது? அதை எதற்காகச் சுவரில் மாட்டி வைத்திருக்கிறார்கள்? அழகுக்காகவா? அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா? இப்படி வீடுகளில் மான் கொம்பை வைத்திருப்பதால் பலன் என்ன? என்பதுபற்றி யெல்லாம் நான் அக்கறை கொள்ளவில்லை. வீட்டினுள்ளே பரணில், பாய்போல சுருட்டி வைக்கப்பட்டிருந்த மான்தோல் ஒன்றும் அங்கு இருந்தது. அந்த மான்தோலும் இந்தக் கொம்புக்குரிய மானினுடையதாக இருந்திருக்குமோ என்னவோ.

வீட்டில் ஏதாவது சமயக்கிரியைகளுக்காக ஐயர்மார் வரும் நாட்களில்மட்டும் அந்த மான் தோல் பரணிலிருந்து கீழிறங்கும்.“ஐயர் வாறேர்.. அந்த மான்தோலை எடுத்து விரிச்சுவிடு. அவர் இருக்கட்டும்!“ என்று எனக்குக் கட்டளை இடப்படும். மான்தோலில் வேறு யாரும் அமர்வதில்லை. “ஐயர்மார் மட்டும்தான் மான்தோலிலை இருக்கலாம்!“

“ஏன் அப்படி?“ என்ற கேள்வியும் அப்போது என்னிடத்தில் இல்லை. இதெல்லாம் காலகாலமாக நடந்துவருகிற சங்கதிகள். கேள்வி கேட்பதுவோ சடங்குகள் சம்பிரதாயங்களை மாற்றுவதோ முறையற்ற செயலாக எனக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது.

ஓர் உயிரைக்கொன்று அதன் தோல் தசை இரத்தம் என்பவைகளைப் பயன்படுத்திக் கொள்வதுதான் பாவமே தவிர, இயற்கையாகவே இறந்துபோகிற ஒன்றின் உடலைப் பயன்படுத்துவது பாவமல்ல என்ற விதி மனிதர்களால் இயற்றப்பட்டிருக்கிறது. அதனால்தான் மானினதும் புலியினதும் தோல்கள் இருக்கைகளாகப் பயன்படுத் தப்படுகின்றன. மாட்டினது தோல் மேளமாகவும் மத்தளமாகவும் ஆலயங்களுக்குள் பிரவேசிக்கின்றது.

சரி இப்போது மானின் கதைக்குவருவோம்.

மான் என்பது வனவிலங்குகளில் ஒன்று. மிகவும் சாதுவான பிராணி. மருண்ட பார்வை கொண்ட அழகான கண்களை உடையது. மிகப்பலமான, கிளைபோன்ற கொம்புகளுடன் காட்சியளிக்கும் ஆண்மானைக் கலை என்றும், பெண்மானைப் பிணை என்றும் அழைக்கப்படுகிறது என்று மானைப்பற்றிய அறிமுகம் தரப்படுகிறது.

இத்தனை பெரிய கொம்புக்குச் சொந்தமுடையதாக இருந்தும்எதிரிகளிடம் இலகுவில் வசப்பட்டுவிடும் மானின் வீரம்பற்றி என்ன சொல்வது? எதிர்ப்பை வெளிக்காட்டாமல் சாதுவாக அடங்கிப்போவதாலோ பயந்து ஒளிந்துகொள்வதாலோ ஓர் இனம் தன்னைத்தானே அழித்துக்கொண்டுவிடும் என்ற விதி மான்களுக்கும் பொருந்தும்.

“தேடிவந்தேனே புள்ளி மானே!...“

ஶ்ரீவள்ளி நாடகத்தில் வேடனாக வேடமிட்டுவரும் முருகனாக, கதையின்நாயகன் பாடிக்கொண்டு ஓடிவருவார். மேடையில் மான் இருக்காது. மானுக்குப் பதிலாக வள்ளி இருப்பாள்.வில்லும் அம்பும் கையிலிருந்தாலும் முருகனின் நோக்கம் புள்ளிமான் வேட்டையல்ல. வள்ளிமான் வேட்டை.

“உயிர்க்கொல்லி நோயான“ காதலுக்கு இலக்கானவர்கள் எவருக்கும் எல்லா உயிர்கள்மீதும் அதீதமான பாசம் ஏற்பட்டுவிடுவது இயற்கை.அதனால் துரத்தி வந்த மானைக் கொல்வது முருகனின் நோக்கமல்ல.வள்ளியின் நேசத்துக்குரிய மானைக் கைப்பற்றப் போவதாக அறிவிப்பதன்மூலம் அவளது நேசத்தை தன் பக்கம் திருப்புவதே அவனது நோக்கம்.

ஆடுவளர்ப்பு மாடுவளர்ப்பு கோழிவளர்ப்பு என்று பெண்கள் தங்கள் வீடுகளில் வளர்க்க விரும்பும் விலங்குகளுக்குப் பதிலாக அது என்ன மான் வளர்ப்பு?முன்னைய காலங்களில் மான்களும் வளர்ப்புப் பிராணிகளில் ஒன்றுதான். பெரும்பாலும் முனிவர்களின் குடில்களில் அவர்களது பத்தினியரின் பிரியத்துக்குரியவை களாக மான்களும் மயில்களும் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

இலக்கியங்களின் பல்வேறு பக்கங்களில் மானும் ஓர் முக்கிய பாத்திரமாக இடம் பிடித்திருக்கிறது.மாரீசன் மாயமானாக மாறி சீதையை இராமரிடமிருந்து பிரிப்பதற்கு வழிவகுத்த கதை நமக்கெல்லாம் தெரியும். மான்களை வதைசெய்ததால் துன்பப்பட்டவர்கள் பலரை பண்டைய இலக்கியங்களில் நாம் அதிகம் காணலாம். உலகெங்கிலும் மான்கள் பெருவாரியாக வாழ்ந்த காலம் ஒன்று இருந்திருக்கிறது. சாதுவாகவும் தாவரபட்சணியாகவும் இருக்கின்ற விலங்கினங்கள் ஏனைய உயிரினங்களுக்கு இலகுவில் இரையாகிப் போகின்ற ஆபத்தை தொடக்க காலத்திலிருந்தே மான்களும் எதிர்கொண்டன. அதனால் அவற்றின் இனமும் அருகி வருகிறது. மான்களை இரையாகக் கொள்ளும் மனிதர்களிடமிருந்து அவற்றைக் காப்பதற்காக இப்போது பல நாடுகளில் மான்வேட்டைத் தடைச்சட்டம் அமுல் படுத்தப்பட்டிருக்கிறது.



இப்போது முருகன் “தேடிவந்தேனே புள்ளிமானே“ என்று வில் அம்புடன் வந்தால் அவரையும் பிடித்து உள்ளே போட்டுவிடலாம்.

“மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமான்!“ என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறாரேஅந்தக் கவரிமானும் இந்த மான்வகைகளில் ஒன்றா? மானினத்துக்கும் கவரிமானுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று அண்மைக்காலமாக அடித்துச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள் சில அறிஞர்கள். உண்மையில் கவரிமான் என்றொரு இனமே கிடையாது. வள்ளுவர் குறித்தது “கவரிமா“ என்னும் ஒரு காட்டு மிருகத்தையே தவிர மானல்ல அது என்கிறார்கள் அவர்கள். பல சந்தர்ப்பங்களில் உண்மையைவிடக் கற்பனை அதிக சக்திவாய்ந்ததாகி விடுகிறது. கவரிமான் இதற்கு நல்ல உதாரணம். கற்பனை மான்களை ஒதுக்கிவிட்டு நிஜமான்களைக் காக்கவேண்டிய கடமை நமக்குரியது.

(பிரசுரம் வெற்றிமணி 2011 )



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# "தாய் மண்ணை நேசிப்போம்" வன்னி மாவட்டத்தில் 96 குடும்பங்கள் பயன்பெற்றனர்













**"தாய் மண்ணை நேசிப்போம்"** என்ற நல் மனதோடு இங்கிலாந்தில் இருந்து M&M family நிறுவனத்தினர் தலா 3000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை,கடந்த 16.07.2022 அன்று 76 குடும்பங்களுக்கு வழங்கினர்.

மேற்படி உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர் – பேராறு – ஒட்டுசுட்டான், திருமதி நந்தினி சுதாஸ்கரன், காம்பாவில் – செல்வி நிலா புதுக்குடியிருப்பு மேற்கு – திருமதி ராதிகா, தேவிபுரம் – திரு உஷாந்தன் ஆகியோரின் வழி நடத்தலில் இடம் பெற்றது. ஆனந்தபுரம்– செல்வி நிலா அவர்களின் ஏற்பாட்டில் 20 குடும்பத்தினருக்கும் (23.07.2022 ) இதன் மூலம் 96 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

எரிபொருள் கிட்டாத இக்காலத்தில் புதுக்குடியிருப்பு, பேராறு, தேவிபுரம் ஆகிய பகுதிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்ய பெருமனதோடு, உதவி அருட் தந்தை சுமன் அவர்களுக்கு எமது நன்றி. இவ் வைபவத்தில் வெற்றிமணி சிவகுமாரன், ஜெயபவானி, சிவகுமாரன், யோ, சாந்தி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வுக்கு உதவினர். ஒவ்வொரு கிராமத்திலும், அக்கிராமத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஆருஆ கயஅடைல க்கு நன்றி தெரிவித்தனர். எமது விடுமுறை தாய் மண்ணில் பயனுள்ளதாக அமைவது,கண்டு மகிழ்கின்றோம்.

**பி.குறிப்பு:** உதவி பெறுபவர்களது முகங்கள் தெரியாமல் படம் எடுத்துள்ளனர்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஒரு பேருந்தில் பேசிய அரசியலும் அலசலும்!

பாதிப் பேர் புதுசு. நாளைக்கு எரிபொருள் வந்தால் எல்லாம் பறந்து போகும், பெடியள் மட்டுமில்லை, பெட்டையளும் தான். நீங்கள் நல் இடத்தில இருந்திடியள். பஸ்ஸில முன்னுக்கும், இருக்கப்படாது, பின்னுக்கும் இருக்கப்படாது, பஸ்ஸின்ரை நீளத்தைதப் பார்த்து நாலாம்,ஐந்தாம்,வரிசையில இருக்கவேண்டும், இடம் கனக்க இருந்தாலும் முன்னுக்கு, இருக்கப்படாது. ஏன் குலுக்குமே என்றேன். இல்லை! இஞ்ச பாருங்கோ ஆஸ்பத்திரிக்கு எண்டு பிள்ளையை தூக்கி வருகிற தாய்மாரும் இருக்கினம்,

வரைக்கை போகைக்க, இடம் விடுவினம் இருக்க என்று வீட்டில் நிக்கிற பிள்ளை ஒன்றை தூக்கி வருகிறதுகளும் இருக்கினம், இதை நான் ஏற்க மாட்டேன், நீங்கள் கண்டனீங்களோ, என்றேன்!

அவருக்கு கொஞ்சம் முகம் சரி இல்லை, நான் தெரியாமல் கதைக்கப்படாது என்றேன். அதற்குப்பிறகு அவர் தெரிஞ்சதும் கதைக்க வில்லை. யாழ்ப்பாணம் வந்தாச்சு சுத்திச் சுத்தி பழைய நினைவுகளே கை தந்தன. மீண்டும் திரும்ப பஸ் எடுத்தேன். நடுவில் போய் இருந்தேன். சில சமயங்களில் சிலரது அட்வைஸ் நேரம் சென்று றழசம பண்ணுமோ. நான் நல்லவனா? கெட்டவனா அல்லது ஏன் வம்பை என்று ஒதுங்கியவனா?

பஸ் 10 நிமிடத்தில் நிறைந்துவிட்டது, இதோ இதோ புறப்படுகிறது என்று பார்த்தால் அரைமணி நேரம் கோணடித்து தான் புறப்படப் போவதை யாவருக்கும் தெரிவித்து எவரையும் விடாது ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. எனக்கு அருகில் ஒரு கிழவன் அமர்ந்து இருந்தார். அவர் ஒன்றில் அமிர்தலிங்கம் அவர்களின் ஆதரவாளனோ, இல்லை ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஆளாகவோ இருந்திருப்பார் போல் தோன்றியது.

கிழவன் என்று நான் சொன்னது அவருக்கு என் வயதுதான் இருக்கும். அவர் டை தலைக்கு வைத்திருந்தால், அவர் நிச்சயம் எனக்கு தம்பிதான்.

தம்பி 20 திகதி ஜனாதிபதி தெரிவாம். என்ன நினைக்கிறீங்கள் என்றார். இப்படி முன்பின் தெரியாதவர்களிடம், ஒன்றில் சரியான வெய்யிலாக்கிடக்கு, மழைவரும் போல் கிடக்கு என்று மட்டுமல்ல, அரசியலும், கதைக்கலாம். முன்பு அரசில் இங்கு பேசவேண்டாம் என்று தேத்தண்ணி கடைகளில் போட்டும் இருப்பார்களாம். வாதாட்டம் போடாமல் கருத்து அறிவது என்றால் என்ன பிரச்சினை.

நான் நினைச்சது போலவே, தம்பி இப்ப அமிர்தலிங்கம் இருந்தால் என்று தொடங்கி. தமிழர் மத்தியிலும் நல்ல தலைவர்கள் இல்லை சிங்களவர் மத்தியிலும் இல்லை. ரணிலுக்கு பிள்ளை குட்டி இல்லை, சொத்து என்று அலைய மாட்டார். எம். ஜி. ஆர். சுரி! ஜெயலலிதா? தமிழர் மனதில் இப்படி ஒரு எண்ணம் பதிந்து இருக்கவே செய்கிறது. கோல்பேசில் கோத்தாவை விரட்டினதே ரணிலை கொண்டுவரவோ என்று தோன்றுது. ரணில் கோத்தா போல பதவியை விட்டு ஓடமாட்டார். மகிந்தாவுக்கும் வேறு எவரும் நம்பிக்கையாக இல்லை.

இப்ப ஜனாதிபதி என்றால் ரணில் தான். யார் வந்தாலும் தமிழனுக்கு, ஒன்றும் கிடையாது. நான் மூச்சும் விடவில்லை என்ர மூச்சையும்வாங்கிவாங்கிபஸ்ஓடிக்கொண்டு இருந்தது. மொத்தத்தில் தமிழருக்கு எந்த அரசு வந்தாலும் ஒன்றும் இல்லை என்பது யாவர் மனதிலும், உள்ளதுதான்.

இப்ப கெட்டவனுக்குள், குறைந்த கெட்டவன் மட்டுமே தேடும் காலம் இப்போ!




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு காரியம் நடக்கட்டும் தொடர்ந்துவிடு!

ஆர்கலி (இலங்கை)

பெரும்பாலும் இந்த உலகம் வெற்றியை நோக்கி ஓடுவதை விட வெற்றிக்காக ஓடுவதையே முதன்மையாக கொண்டு இயங்குகிறது. இந்த வகுப்பில் நானும் ஒருத்தியே. ஆமாம் இரண்டுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. வெற்றியை நோக்கி ஓடுபவன் பாதையில் பலவற்றை பார்த்து முகம் கொடுத்து கொண்டாடித் தீர்த்து முட்டி மோதி சந்தோசங்களை கடந்து பயணித்து வெற்றியை தொடுவான். ஆனால் வெற்றிக்காக ஓடுபவன் இவற்றை எல்லாம் கொண்டிராத வெறித்த பாதையில் ஓடிக் கொண்டிருப்பான். அப்பயணத்தில் பலர் இடை நடுவே திரும்பியும் வந்துவிடுவார்கள்.

காதலன் ஃ காதலி என்னை தவிக்கவிட்டு போயிட்டாங்க, இனி எப்படி வாழ்வேன் என்று ஏங்குவதும் பரீட்சையில் நினைத்த பெறுபேறு இல்லை இனி எப்படி வாழ்வேன். ஊருக்கு முன்னாடி நிற்பனோ என்று தயங்குவதும் வேலை இல்லை., படிச்ச படிப்புக்கு வேலை இல்லை, வேலையில் என்னை மரியாதையாக நடத்துறாங்க இல்ல, இந்த சம்பளம் எப்படி காணும் என்று நினைத்து தலையை உடைத்துக் கொள்வதும் என தோல்விகளுக்குள் சிக்கி சிக்கி நம்மை அதற்குள்ளேயே அமிழ்த்தி விடுகிறோம். எழுந்து கொள்ள இயலாத தூரத்துக்கு மேலும் மேலும் தோல்வியை ஆழ அலைந்து கொண்டிருக்கிறோம்.

முதலில் கவலையை அதுபாட்டில் கிடந்து கதறும் தவளை போல் விட்டுவிடுங்கள்.மழை போல் இருக்க கற்றுக் கொள்ளுங்கள். “அதுசரி, கவலையா இருந்தால் என்னால சாப்பிட கூட முடியுதில்லையே, பிறகு எப்படி“ என்று சலித்துக் கொள்ளாதீர்கள். கவலைகளை அடித்து தின்று பசியாற்றும் திறானி கொண்டவை தான் கலை.

எனக்கு நல்லா பாட வரும், நான் nrkah dance ஆடுவன், ஏதோ கொஞ்சமா கவிதை எழுதுவன், நான் கதை சொன்னால் அத கேட்க என் பக்கத்தில ஒரு கூட்டமே இருக்கும், அசத்தலா சமைப்பன் நான், தூங்கும் போது கூட டிரளைநெளள மூளை எனக்கு, நல்லா சாப்பிடுவன், அந்த மாதிரி meme create பண்ணுவன் என்று ஆளாளுக்கு ஆயிரம் கலை தூசி தட்டாமல் நமக்குள்ளே அடங்கி கிடக்கிறது. இதனை கொஞ்சமாக தட்டிவிட்டுப் பாருங்கள். நம் வாழ்க்கையின் பிரகாசம் அபாரமாக இருக்கும்.



நாம் சிறந்த எழுத்தாளர்களாக பார்ப்பது அநேகமாக காதல் தோல்வியில் கவிஞனானவர்களை தான். ஆமாம் காதலில் தோல்வி அடையாதவன் காதலிக்காதவனாகவே இருக்க முடியும். தொழிலதிபர் ரட்டன் டாடா கூட ஒரு காதல் தோல்வியானவர். “போ நீ போ“ என்ற பாடல் நம்முள் பெரும்பாலானோருக்கும் பிடித்த பாடல். அதனை அனிருத்தின் காதல் தோல்வியின் போது உருவானது என்று ஒரு interviewல் கூறி இருக்கிறார்.

நம் ஊருக்குள் ஐந்தாம் வகுப்பு கூட pass பண்ணதவன் கடை, டிரளைநெளள என்று பெரிய தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முதலாளியாக இருப்பார்கள். கல்வி முக்கியமானது தான். ஆனால் எதை நாம் கல்வி, படிப்பு என்று அடையாளப்படுத்துகிறோம். புத்தகத்தில் இருப்பதை அப்படியே உள்வாங்கி பரீட்சையில் கொட்டுவதா?. அது தான் இல்லை.

“என்ப்பா நீ அந்த நஓயஅ ல கயடை ஆம் அப்படியா? இனி என்ன பண்ண போறாய்?“ என்று கேள்வி எழுப்புபவர் களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளுங்கள். இங்கு பாடப்புத்தகத்தில் பதிக்கப்பட்ட வினாக்கள் அடங்கிய பரீட்சையில் தோன்றும்போகலாம் அல்லது நினைத்த பேறினை அடையாமல் போகலாம். கல்விமான் ஆகாமல் போகலாம். ஆனால் உலகில் வாழ்க்கைப் பாடத்தில் ஜெயித்தவன் மனிதாகிறான்.

பரீட்சையில் தோற்கும் குழந்தைகள் தற்கொலை என்னும் இறுதி முடிவுக்கு வருவதற்கான காரணம் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாமல் என்பது இல்லை. இந்த உலகம் பரீட்சையில் தோற்பவனை தோல்வியாளன், எதற்கும் லாயக்கு இல்லாதவன் என்று நம்ப வைத்து விட்டது. அத்துடன் அவமானச் சின்னமாக சித்தரித்தும் விட்டது. உயர்தர மாணவன் நன்றாக பாடுவான், நன்றாக விளையாடுவான்,புரவையச வாசிப்பான், குறுந்திரைப்படம் இயக்குவான். “ஏய், நீ படிக்கிற வேலைய பாரு இந்த கறுமத்தை எல்லாம் விட்டுட்டு“ என்று சொல்லி அவனது கலை ஆற்றலை அடக்கி வைத்து விடுவார்கள்.

எல்லாவற்றுக்கு விட இயக்குனராக நடிகராக துடிக்கும் பையனுக்கு பெண் கொடுக்கவே தயங்குவார்கள். மாப்பிள்ளை / மருமகள் என்ன வேலை? என்று கேட்கும் போது பாடல்களுக்கு வரி எழுதி கொடுப்பார், பாடல் இசையமைக்கிறார், படம் எடுக்கிறார் என்று எதாவது சொன்னதும், “இதெல்லாம் இருக்கட்டும், அவங்க என்ன வேல என்னு சொல்லுங்களேன்“ என்று அவர்களுக்கு தெரிந்ததான ஒரு தொழிலின் பெயரை கூற வேண்டும் என பிரியப்படுவார்கள். வீட்டு மரங்களை விட காட்டு மரங்களின் வலிமையும் பெறுமதியும் அதிகம் தான்.எவர் கட்டுப்படுக்குள்ளும் இருந்துவிடாமல் தனது சுயத்துடன் கலையாக வளர்வதே காரணம். அவரவர் திறமைக்கு ஏற்றவாறான களத்தில் பயணிப்பதே சிறந்த வெற்றி.

கலை மனிதனை வளர்க்குமே தவிர வாறிவிடுவதில்லை. வேதனையில் இருக்கும் போது பாடல்

30 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கிளிநொச்சி உருத்திரபுரம் கிராம மக்களுக்கான குடிநீர்ச் சேவை!

"நீர் இன்றி அமையாது உலகு"















நிலா (புதுக்குடியிருப்பு, இலங்கை)

நாம் வாழும் இந்த பூமிப் பந்தின் உயிர் ஆதாரமே நீர் தான். 71% நீரினால் நிறைந்திருப்பதால் தான் பூமி நீல நிறக் கோள் எனப்படுகிறது. அந்த வகையில் தங்களது குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்த வன்னி மண்ணின் அழகிய கிராமங்களில் ஒன்றான, கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள உருத்திரபுரம் கிராம மக்களுக்கான குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்வதற்காக, திரு ஹென்றி எட்வேட் பர்த்தலோமியுஸ் அவர்களின் நினைவாக அவரது பாரியார் திருமதி மங்களேஸ்வரி பர்த்தலோமியுஸ் அவர்கள் 302340.00 செலவில் உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை ஆலய வளாகத்தில் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்து வழங்கியுள்ளார். இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை ஆலய வளாகத்தில், இளவாலை புனித வளனார் ஆண்கள் விடுதியின் இயக்குனர் அருட்பணி ப.சுமன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்விற்கான வரவேற்புரையினை திரு.ஜோ தெய்வேந்திரன் அவர்கள் நிகழ்த்தினார்.

இந் நிகழ்விற்கு திருமதி மங்களேஸ்வரி பர்த்தலோமியுஸ் அவர்கள் சீரற்ற நாட்டு நிலைமை காரணமாக வருகை தந்திருக்கவில்லை. எனினும் இக் குழாய்க்கிணற்றுக்கான முதற் புள்ளியை இட்டவர்களான அவரது உறவினர்கள் திரு,திருமதி (வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர்) மு.க.சு. சிவகுமாரன் தம்பதியினரும், இவர்களது நெருங்கிய நண்பர்கள் இக் கோலத்தின் இரண்டாவது புள்ளியான திரு திருமதி ஜோ தெய்வேந்திரன் தம்பதியினரும், மூன்றாவது புள்ளியான இளவாலை புனித வளனார் ஆண்கள் விடுதியின்

27 ஆம் பக்கம் பார்க்க...


## வெற்றிமணி திருமண சேவை






யேர்மனியில் மான்கைமில் Wirchaftsingenier ஆக வேலை செய்யும் 33 வயது சைவவேளாளர் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன், 100 K.M தூரத்துக்குள் விரும்பத்தக்கது.

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- +4915774318528

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் Gymnasium ஆசிரியையாக பணிபுரியும் நற்குணமுடைய சைவவேளாளர் 28 வயது பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன் 100 K.M தூரத்துக்குள் வரவேற்கிறோம்.

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு +4915774318528




அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

# கிளிநொச்சி உருத்திரபுரம்

## கிராம மக்களுக்கான குடிநீர்ச் சேவை!

"நீர் இன்றி அமையாது உலகு"









படங்கள்: வெற்றிமணி, மாதங்கன்

இயக்குநர் அருட்பணி சுமன் அடிகளாரும், நான்காம், புள்ளியை உருத்திரபுரம் பங்குத்தந்தை அருட்பணி போல் அனக்ளிற் அடிகளாரும்,ஐந்தாம் புள்ளியை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நிலா அவர்களும், ஆறாம் புள்ளியை பங்கில் பணியாற்றும் அருட்சகோதரிகளும், உருத்திரபுரம் ஆரோபணம் அவர்களும் ஏழாவது புள்ளியினை விடுதியின் இயக்குநர் அருட்பணி சசி இட்டு,குடிநீர்த் திட்டத்தினை அழகிய கோலம் என ஆக்கிட, மற்றும் மாணவர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். இக் குழாய்கிணற்றுக்கான நிதியை அன்பளிப்பு செய்த திருமதி மங்களேஸ்வரி பர்த்தலோமியுஸ் மற்றும் அவரது கணவர் பற்றி திரு மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் சிறப்பு உரையை நிகழ்த்தினார். அடுத்து உருத்திரபுரம் பங்குத்தந்தை தனது நன்றியையும் மகிழ்வினையும் வெளிப்படுத்தி உரையாற்றினார்.

தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட நீர்க் குழாயிலிருந்து கிராமத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களால் நீர் எடுக்கப்பட்டு நிகழ்வு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அங்கு கூடியிருந்தவர்கள் தங்களது மகிழ்வினை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அதனையடுத்து இந் நிகழ்வின் நினைவாக திருமதி மங்களேஸ்வரி பர்த்தலோமியுஸ் அவர்களுக்கு நினைவுக் கேடயமும் மலர்ச்செண்டும் வழங்கி வைக்கப்பட்டது. அதனை திருமதி ஜோ சாந்தி அவர்கள் பங்குத்தந்தை அருட்பணி போல் அவர்களிடம் கையளிக்க அவர் அதனை திரு திருமதி சிவகுமாரன் அவர்களிடம் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து கடந்த 08.07.2022 அன்று தனது 70வது அகவையை நிறைவு செய்த திரு சிவகுமாரன் அவர்களுக்கு நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்கள், மாணவர்கள், உருத்திரபுரம் கிராம மக்கள் அனைவரும் இணைந்து கேக் வெட்டி பிறந்ததின வாழ்த்துக் கூறும் நிகழ்வு இடம்பெற்றதுடன் திருமதி ஜோ சாந்தி அவர்கள் அவருக்கான பிறந்தநாள் வாழ்த்துப்பா வாசித்து வழங்கினார். அதன் தொடர்ச்சியாக மதிய உணவும் அங்கு கூடியிருந்த மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த மதிய உணவினை உருத்திரபுரம் கிராம மக்கள் தாங்களே சமைத்து வழங்கியிருந்தனர். இதற்கான நிதியை திரு சிவகுமாரன் அவர்கள் வழங்கியிருந்தார். ஒரு கிராமத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்த மகிழ்வுடன் அனைவரும் விடைபெற்றனர்.




22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நாட்டின் வளமும் ஆட்சி முறையும்



திருப்பிக் கொடுத்தாலேயே கேட்கக் கேட்கக் கொடுக்கும். சட்டியில் இருந்தாலேயே அகப் பையில் வரும். சட்டியை வழித்து சொந்த சௌகரியங்களுக்கு பயன்படுத்தினால், நாட்டு மக்களுக்கு எங்கே அகப்பையிலே வரப்போகிறது. வாழத் தெரியாதவர்கள் வாழுகின்ற நாட்டில் ஆளத் தெரியாதவர் ஆட்சி நடக்கிறது என்று வேதாத்திரி மகரிஸி சொன்னது போல் எழுதத் தெரியாதவன் ஏட்டைக் கெடுத்தான். ஆளத் தெரியாதவன் நாட்டைக் கெடுத்தான் என்பது கண்கூடு.

தொண்டைமான் தன் படைவலிமையில் கர்வம் கொண்டு அதியமான் நெடுமான் அஞ்சி மீது படையெடுப்பதற்காக முடிவெடுத்து இருந்த போது அப் போரை நிறுத்த எண்ணிய ஔவையார், தொண்டைமான் தன்னுடைய படைக்கலக் கொட்டிலைக் காட்டிய போது

**இவ்வே, பீலி அணிந்து**
**மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ்**
**திருத்திநெய் அணிந்து**
**கடியுடை வியனக சவ்வே அவ்வே,**
**பகைவர்க் குத்திக்**
**கோடுதுதி சிதைந்து**
**கொற்றுறைக் குற்றில**
**மாதேர் என்றும்**
**உண்டாயின் பதம்கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்,**
**அண்ணல்எங் கோமான்**
**வைந்துதி வேலே**

கூரிய முனையுடைய வேல்களோ பகைவர்களைக் குத்திப் பக்கங்களும், நுனியும் கூர் இழந்து, கொல்லனுடைய உலைக் களத்திலே இருக்கின்றன. உன்னுடைய படைக்கலங்களோ, மயிற்பீலியை அணிந்து, மாலை சூடி, உருவம் திரண்ட வலிமையுடைய காம்பு அழகுறச் செய்து நெய் இடப்பெற்று, காவலையுடைய அகன்ற அரண்மனையில் இருக்கின்றன என்று தொண்டைமானைப் புகழ்வதைப் போல் அதியமானைப் புகழ்ந் துரைக்கின்றர். இப்போரால் அழிவு அதியமானுககு அல்ல அவனை எதிர்ப்பவர்களுக் கே என்பதை ஔவையார் மூலம் அறிந்த தொண்டைமான் அச்சம் கொண்டு போர் எண்ணத்தைக் கைவிட்டான்.

இவ்வாறு நாட்டிற்கு ஒரு பங்கம் வரும் போது அதை முளையிலேயே கிள்ளி எறிய சிறந்த ஆலோசகர்கள் இல்லாத நாடு பாரதி சொன்னது போல்ஐயோ என்றுதான்போகும். அதை மீண்டும் நிமிர்த்துவதற்குரிய ஆய்வில் இறங்குவதுதான் தற்கால தீர்வாக அமையும். ■

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பகிர்ந்துண்டு வாழாத வாழ்வென்ன வாழ்வோ?

சொத்து சேமித்து அதனை ஊனமாக்கி விடாதீர்கள் என்பார்கள்.

பலர் தூர தேசத்தில் பாதுகாப்பாக பஞ்சு மெத்தையில் படுத்துறங்கிக்கொண்டு இருக்கும் செல்வச்செழிப்பினால் தம் தாயகத்தின் செலாவணி விகிதத்தை பயன்படுத்தி ஏக்கர் கணக்கில் நிலப்பரப்புக்களையெல்லாம் வாங்கி கட்டாந்தரையாக விடுகின்றனர்.

அதனுள் யாரையும் குடியிருக்க அனுமதிக்காமலும், மூதாதையர் சொத்து என சொந்த ஊரில் உள்ள காடு போன்ற நிலங்களை தேவைப்படுபவர்களுக்கு விற்பனை செய்யவும் விரும்பாமலும், பிறரை குடியமர்த்தாமலும் அதனை பற்றைப்புற்கள் படர்ந்து வளரவும் விடுகின்றனர். இருபக்க வழிப் போக்கிற்கும் இடைப்பட்ட அபாய பிரதேசங்களாக இவை காணப்படுவதே உண்மை. அந்த நிலங்கள்தான் தற்காலத்தில் களவு செய்பவர்களுக்கு காவலாளியாகவும், கடத்தல், துஷ்பிரயோகம், கொலை, மறைத்தல் போன்ற பாதகச் செயல்களுக்கு அடிப்படையாகவும் விளங்குவதனால் இந்த பாவச் செயல்களின் பங்குதாரிகளாக இத்தகைய பன்னாட்டு வாழ் பணக்காரர்களும் அடங்குகின்றனர் என்பதனை அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இருப்பவர் இயல்பாக இருக்கும் இயற்கை வளத்தின் விற்பனை விலைகளை வானுயர ஏற்றிவிட்டு விடுவதனால் இல்லாதவருக்கு தேவை ஏற்படுகையில் என்ன செய்ய முடியும். எரியும் வீட்டில் பிடுங்கும் வரை இலாபம் பார்க்கும் தன்மைகள் கைவிடப்பட வேண்டும். அளவான வளங்களோடு போதும் என்ற மனதோடு வாழப் பழக வேண்டும். இவை குற்றம் போன்று தோற்றமளிக்காத குற்றங்கள்தான். இன்று சமுதாயத்தின் பிடியில் இத்தகைய குற்றவாளிகள் தப்பித்தாலும் இயற்கையின் பிடியில் ஒருநாள் நழுவி விட முடியாது.

கடினப்பட்டு உழைத்தவற்றையெல்லாம் அற்றவர்களுக்கு வாரி வழங்குகின்றோமே அவர்கள் திரும்பவும் பிரதியுபகாரம் செய்யும் நிலையில் இல்லையே என ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. செய்த நன்மை அவரவர் மூலம் திருப்பி கிடைக்காது போனாலும் தக்க சமயத்தில் பிறிதொரு வழியாக பலமடங்கு கிடைக்கும் என பல ஞானிகள் உறுதியாக கூறியுள்ளனர்.

இப்பிரபஞ்சம் எவருடைய கடனையும் வைத்திருப்பதில்லை. "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கோல் என வேண்டா – நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்தலையாலே தான்தருதலால்". என்பது போல காத்திருந்து கனி உண்ணலாம் நற்கருமம் செய்து வந்தால். தர்மம் தலை காக்கும் எனவும் அதாவது தர்மத்தால் அகமகிழ்ந்து கூறிய ஆசிகள் உயிர் கவசமாகவே செயற்படும் என சொல்லப்படுகிறது.

பிறருக்கு பயன்பட்டு வாழும் வாழ்வில் எதன் மீதும் பயம் உண்டாகாது. சொல்லப்போனால் குறுகிய வாழ்வு பரந்து விரிவடைவதனால் மரணத்தறுவாயில் கூட நிம்மதியும் புன்னகையும் ததும்பி உயிர் உலகெங்கும் வியாபித்து நிற்கும். இதில் இறப்பு என்பதும்தான் ஏது? ஆசை அற்ற நிலையே மோட்சம். அறம் ஆசையினை அறுத்துவிடும் ஆகையால் ஜீவ காருணியமே மோட்ச வீட்டின் திறவு கோல் எனப்பட்டது. ■

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பக்கத்து இலைக்கு 'பாயாசம்'

கடைசீல வாழைப்பழமும் பலகாரமும் வைக்க எல்லாரும் முட்டின வயித்தோட கஸ்டப்பட்டு மெல்ல மெல்ல எழும்புவினம் . சபைகுளப்பிகள் ஆரும் இடையில எழும்ப மற்றாக்கள் விடமாட்டினம். " எழும்பிறாக்கள் இலையை விட்டிட்டு எழும்புங்கோ" எண்டு திரும்பத்திரும்பச் சொல்லி, ஏலாத ஆக்களைத் தூக்கி விட, கிணத்தடீல கைகழுவவும் குடிக்கவும் தண்ணி குடுத்துக் கொண்டு இருப்பினம் கொஞ்சப்பேர்.

ஆம்பிளைச் சபை முடிய பொம்பிளைச் சபை எண்டது வழக்கம். பெண்டுகள் சாப்பிடேக்கேம் கதைச்சுக்கொண்டிருப்பினம் சாப்பிடவும் மாட்டினம் வடிவாச் சாப்பிடவும் விடாயினம் எண்ட படியால் தான் இந்த சமத்துவமின்மை எண்டு நான் நினைக்கிறன். தாலி கட்டி ஆசீர்வாதம் முடிச்சு மாப்பிளை பொம்பிளை பூதாக்கலம் பண்ண சாமியறைக்குப் போக, அவையை மறந்திட்டு பொம்பிளை மாப்பிளையின்டை தாய் தேப்பன் மார் வந்து தேடித்தேடி சாப்பிடாத ஆக்களை கூட்டிக் கொண்டுவாறது, சோறு கறி காணுமா எண்டு பாக்கிறது, சாப்பிட்ட ஆக்களிக்கு பலகாரம் வெத்திலை, சுருட்டு எல்லாம் போனதா எண்டு பாக்கிறது, சபை போடிற பெடியளுக்கு எண்டு சோடா, யூஸ் குடுக்கிறது,வந்திட்டுப் போறாக்களுக்கு வெத்திலைப்பை குடுக்கிறது எண்டு சுழண்டு கொண்டு நிப்பினம்.

மச்சான் கிழங்கு முடியுதாம் பாத்து குறைச்சுப்போடு, கரண்டியை சின்னனா மாத்து, பாயசம் கொஞ்சம் கட்டிப் படுது சுடுதண்ணி விட்டு தண்ணியாக்கு, ப்பளத்தை ரெண்டாக்கு, பெரிய வாழையிலையைப் போடாத , தயிரை மோராக்கு, கனக்க மிச்சம் இருக்கிற கறியை ரெண்டு மூண்டு தரம் கொண்டு போ எண்டு நிலமைகளை அறிஞ்சு ஓடர்கள் வரும்.

"எல்லாரும் சாப்பிட்டிட்டினம் பெடியள் வாங்கோ சாப்பிடுங்கோ " எண்டு கடைசியா எங்களைக் கூப்பிட , மிச்சம் பிடிச்சு ஒளிச்சுவைச்ச எல்லாக் கறிச்சட்டியும் வெளீல வரும். பெரிய இலையில அவாவில அள்ளிப்போட்டிட்டு ரெண்டு வாய் வைக்கப் பசி போயிடும். தம்பியவை சபை போட்டகைக்கு பசி போயிடும் கொஞ்சம் எண்டாலும் சாப்பிடுங்கோ எண்டு கேக்கிற அன்புக்கு இன்னும் கொஞ்சம் சாப்பிடினாங்கள்.

ஆனால் கலியாண வேலை எல்லாம் செய்து சபை போட்டவைக்கெண்டு பிறகு ஒரு மச்சச் சாப்பாட்டு வைபடும் அண்டு மாப்பிளை பொம்பிளையோட வீட்டுக்காரர் எல்லாரும் எங்களுக்கு சாப்பாடு போட உண்டி பிதுங்கச் சாப்பிடுவம். அண்டு சாப்பிடேக்க எனக்கு பாயாசம் வேணும் எண்டு கேட்டுச் சாப்பிடுறது.

ஒரு கலியாணத்தில போய் இந்தக் கனவில இருக்க திடீரெண்டு மனிசி தட்டி " என்ன பாயாசம் எண்டு சொல்லிறீங்கள், பாயாசம் வேணும் எண்டால் மேசையில இருக்கு கெதியெண்டு எடுத்தச் சாப்பிட்டிட்டு வாங்கோ, வீடியோக்காரன் படம் எடுக்கத் தொடங்கினா நாங்கள் றளைா பண்ணிறது கஸ்டம் " எண்டு சொன்னா. மனைவி சொல்லே மந்திரம் எண்டு அவசரமா பாயாசத்தை விழுங்க அது பிளாஸ்டிக் உரிக்கால வரமாட்டன் எண்டு அடம் பிடிக்க அப்பிடியே வைச்சிட்டு மேடைக்கு மனிசிக்குப் பின்னால ஓடிப்போய், கையைக் குடுத்திட்டு ரெண்டு நிமிசம் படத்துக்கு நிக்க, கமராக்காரன் சரி காணும் போங்கோ எண்டான். ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# சோலைக்குயில் அவைக்காற்று களம்
# 34 ஆவது ஆண்டு நிறைவு விழா!

மாதவி



இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. 02.07.2022 யாழ்ப்பாணம் வந்து இறங்கியதும், எரிபொருள் எங்கும், இல்லை என்ற செய்தியுடன், இந்த விழாச் செய்தியுமே என்னை வந்தடைந்த முதல் செய்திகளாகும்.

வெற்றி மணி பத்திரிகையின் ஆடி மாத இதழின் தலைப்புச் செய்தி, இந்த பொருளாதார நெருக்கடிகள் பலவற்றை வெற்றிகரமாகக் கடந்தவர்கள் நாம் என்பதே.

ஒட்டோக்கள், இல்லை, வானங்கள், இல்லை, மோட்டசைக்கிள் இல்லை! இப்படி பல இல்லைகள் மத்தியில் தமிழனுக்கு இருந்த ஒன்று தன்னம்பிக்கை ஒன்றே. எந்த சூழலிலும் வாழ தகுதி பெற்ற இனம் நாம் என்று பெருமை கொள்ளலாம் என்பதற்கு கோகிலா மகேந்திரன் அவர்களின் செயற்பாடுகளும் கட்டியம் கூறுகின்றன.

அழைப்பிதழை பார்த்தேன் காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து 12.00 மணிக்கு முடியும், என்று போட்டு இருந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்குரிய நேரமும் குறித்து இருந்தனர்.

நான் வட்டுக்கோட்டையில் இருந்து அதிகாலை, 5மணிக்கு ஆயத்தமாகி, நடந்து வட்டுக்கோட்டை சென்று 7.20க்கு கண்ணில் தென்பட்ட யாழ்ப்பாணம் பஸ் பிடித்து, யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழை பஸ்பிடித்து இணுவிலை 8.10 அளவில் சென்றடைந்தேன்.

வாசலில் ஒரு பெண்மணி வரவேற்று அழைத்துச் சென்றார். உங்கள் பெயர் சொல்லுங்கள் நான் கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு சொல்கிறேன் என்றா. நான் வெற்றி மணி சிவகுமாரன் என்றேன், ஓ எனக்கு உங்களை தெரியும் என்றா.

எனது அடையாளம் இலங்கையில் அற்றுப்போகவில்லை என்ற அற்ப ஆசையும் வந்துபோனதும், உண்மையே.

8.45 க்கு சரியாக ஏன் கூட்டம் இல்லையே, எரிபொருள் தட்டுப்பாடுதான் என எண்ணியபோது, பஸ் புறப்படும் நேரம் சரியாக ஓடிவந்து ஏறிநிறைக்கும், பயணிகள் போல் பலர் வந்து அமர்ந்தனர்.

ஒரு பெண் மல்லிகை பூக்களால் மேடைக்கு முன்னால் சிறு கோலம் போடுகிறேன் என்றார். கோகிலா மகேந் திரன் சரி போடுங்கள், ஆனால் விழா 9.00 ஆரம்பம் என்றார். இது நேரத்தின் கோலம் மாறது இருப்பதற்கான ஆரம்பப் புள்ளிகள் என்பதனை உணர்ந்தேன். வந்தவர்களை தன் புன்னகையால் வரவேற்று, வரவேற்புரைக்கான நேரம் அதனையும் மிச்சப்படுத்திக் கொண்டார் கோகிலா மகேந்திரன் அவர்கள்.

பிரதம விருந்தினர்களுக்கு ஆராத்தி எடுத்து மண்டபத்துள் அழைத்து வந்தனர்.

மங்கல விளக்குகளை திரு. ப.விக்னேஸ்வரன், திருமதி ரெஜினா இருதயநாதன், வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன், இயல்வாணன், திரு. கி.மகேந்திரராஜா ஏற்றி வைத்தனர்.

நிகழ்ச்சிகள் விழாத் தலைவர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி தலைமையில் ஆரம்பமானது. நமது விழா மரபுகளுக்கு உரிய நிகழ்ச்சி அறிவிப்புகளையும்,தலைவரே அழகாகச் செய்தார்.

பிரதம விருந்தினரர்களாக அருட் திரு, செ.அன்புராசா அடிகள், பேராசிரியர் சா.சிவயோகன், வைத்திய நிபுணர் சி.சிவதாஸ்,திருமதி,பிரேமினி.பொன்னம்பலம்,திரு.ஈஸ்வரநாதபிள்ளைஇ குமரன் ஆகியேர் கலந்து சிறப்பித் தனர்.

கோகிலா மகேந்திரன் அவர்களது பூங்குயில், சீர்மியத்தில் சிறப்பு முறைகள், அறிமுகம் செய்தவர் உளவைத்திய நிபுணர் சி. சிவதாஸ்அவர்களும், "அறிவியல் கதைகள்" அருட்திரு செ. அன்புராசா. அவர்களும்,பூங்குயில் எனும் நூலை திரு. ஈஸ்வரநீதபிள்ளை குமரன் அவர்களும், அறிமுகம் செய்து வைத்தார்கள்.விழிசைச் சிவம் விருதுகள் மூத்த எழு த்தாளர்கள்,

மலரன்னை, டாக்டர் எம். கே. முருகானந்தன்,அவர்களுக்கும், சோலைக்குயில் நாடகக் கலைஞர் விருது த. சிவகுமாரன், பாகீரதி கணேசதுரை, சி.சிவராஜன் அவர்களுக்கும் வழங்கப்பெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக "இயக்மற்றுப்போன உலகில் ஒரு வெளவாலுடன்" என்ற நாடகம் மேடையேறி மக்கள் மனங்களில் பதிந்தது. நாடகத்தினை கோகிலா மகேந்திரன் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார். நாடகம் அறிவியல், விஞ்ஞானம் சார்ந்து சிறப்பாக இருந்தது. ஒப்பனை கதாபத்திரத்துடன் ஒட்டி இருந்தது சிறந்தது.

குறித்த நேரத்திற்கு விழா நிறைவுற்றது. விழா நேரத்தில் யாவருக்கும் வழங்கப்பட்ட ஒரு கோப்பை பால் போல் விழா ஆரோக்கியமாகவும், இனிப்பாகவும் அமைந்தது.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பெட்ரோல் - திரவத் தங்கம்...

எரிபொருளுக்கு ஹகெரோசின்' எனப்பெயரிட்டார். பின், கெரோசின் கேஸ்லைட் (Kerosene gas light company) எனும் புதிய நிறுவனத்தைத் தொடங்கி விற்பனை செய்யத் தொடங்கினார். முந்தைய கண்டுபிடிப்புகளைக் காட்டிலும், கெஸ்னர் கண்டுபிடித்த கெரோசின், குறைந்த செலவில் மிக அதிக அளவிலான வெளிச்சத்தைக் கொடுத்ததால், மக்கள் கெரோசின் பயன்பாட்டை நோக்கி நகர்ந்தனர்.

1859 இல் எட்வின் டிரேக என்பவர் அமெரிக்காவில் உலகத்தின் முதல் நவீன எண்ணைக் கிணற்றினை தோண்டியதனைத் தொடர்ந்து அமேரிக்கா முழுவதும் எண்ணைக்கிணறு களைத் தேடிய பயணம் ஆரம்ப மானது. அப்போதைய காலகட்டத்தில் உலகத்தின் அதிகமான பெட்ரோல் தேவையினை அமெரிக்காவே பூர்த்தி செய்தது. அப்போது தொடங்கிய அமெரிக்காவின் பெட்ரோல் ஆதிக்கம் இன்று வரையில் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றது. அப்போதைய அமெரிக்கா மரத்திலாலான பேரல்களிலேயே கெரோ சினை உலகம் முழுக்க ஏற்றுமதி செய்தனர். அதனாலேயே இன்றுவரையில் எண்ணெய் பேரல்களிலேயே கணக்கிடப்படுகின்றது.

என்னதான் பன்னெடுங்காலமாக கச்சா எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், 20ம் நூற்றாண்டில்தான் பெட்ரோல் மிக முக்கியப் பொருளாக மாறியது. காரணம், உலகில் நிகழ்ந்த இரண்டு முக்கிய கண்டுபிடிப்புகள். அவை, ஜெர்மன் பொறியாளர் நிக்கோலஸ் அகஸ்ட்ஸ் ஆட்டோ, 1876 ம் ஆண்டில் கண்டுபிடித்த, உள்ளெரி இன்ஜின் மற்றும் 1893ம் ஆண்டு, ருடால்ப் டீசல் (Rudolf Diesel) கண்டுபிடித்த டீசல் இன்ஜின். இதைத் தொடர்ந்து, ஏற்பட்ட வாகனப்பெருக்கம் மற்றும் தொழிற்சாலை தேவைகளுக்காக, கச்சா எண்ணெயின் தேவை அசுர வேகத்தில் அதிகரித்தது. பல நாடுகளிலும், 1930க்கு பிறகு பெட்ரோலியத்தின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியது. இன்றைய நிலையில், பெட்ரோலிய உற்பத்தியில், சௌதி அரேபியா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன. ஈரான், ஈராக், குவைத், சவூதி அரேபியா, வெனிசுலா போன்ற ஐந்து நாடுகள் இணைந்து ஒபெக் என்கிற அமைப்பினை உருவாக்கி பெட்ரோலிய விலையினை தமது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்படியாக கச்சா எண்ணெயிலிருந்து தோற்றம் பெற்ற பெட்ரோலியப்பொருட்கள், 20-ம் நூற்றாண்டிலிருந்து தற்போது வரை உலக வணிகம் மற்றும் உலக அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக விளங்குகிறது. பன்னாட்டு பெட்ரோலிய சுத்திகரிப்பு நிறுவனங்கள், பெட்ரோலிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடுகள், பெட்ரோல் இறக்குமதியை நம்பி இருக்கும் நாடுகள் அதன் வரிகள், என தற்கால பெட்ரோலின் வரலாறு எழுதப்பட்டு வருகிறது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி முதல் அழிவு தரும் போர்கள் வரை பெட்ரோலின் எல்லையும் வரலாறும் இன்றளவும் நீண்டுகொண்டே தான் செல்கிறது.

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## "நிறை ஒதம் நீர் நின்று!"

> "உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண் டாகும்
> வெள்ளத்தின் பெருக்கைப்போல்
> கலைப்பெருக்கும்
> கவிப்பெருக்கும் மேவு மாயின்
> பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
> விழிபெற்றுப் பதவி கொள்வார்
> தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
> இங்கமரர் சிறப்புக் கண்டார்"



என்ற பாரதியின் புத்தமுதத்தேனொத்த வரிகளைக் கொண்டு புதிய முறையில் தில்லானா வடிவமைக்கப்பட்டு நிறை ஓதம் நீர் நின்று நிகழ்விற்கு பூரண நிறைவினைத் தந்தது.

வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும் குயிலுவக் கலைஞர்கள் மிடற்றிசை திருமதி வித்யா கல்யாணராமன், தண்ணுமை முனைவர் குரு பரத்வாஜ், நரம்பிசை திருமதி நந்தினி சாய் கிரிதர் ஆகியோர் சென்னையில் இருந்து வருகை தந்திருக்கிறார்கள்.

அமரலோகத்தை ஐவிரலில் தாங்கும் ஓவியர் மதிப்பிற்குரிய பத்மவாசன் ஐயா உட்பட, தேர்ந்தெடுத்த கருப்பொருளின் மேன்மையுணர்ந்தும், நம் எண்ண உண்மை அறிந்தும் தம் அகங்கோர்த்த அன்பினோர்க்கு என்றென்றும் நன்றியுடையோராய், மெயின்பம் அவர்பால் தங்கப் பிரார்த்திக்கின்றோம்.

நெருங்கிய தமிழ்க் காதலை நீள் காலம் கொண்டுசேர்க்கும் நெடுங்கனவின் வேராழத்தை வெளிப்படுத்த அருந்தினமாய் மலர்ந்த இந்த முத்தமிழ்ப் படைப்பு ,இனிமுதல் அகில மகிழ்வு தரும் என்பதில் ஐயமில்லை. ■

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு...

கேட்கிறாம், தனிமையில் குளியலறையில் கூட பாடித் தீர்க்கிறோம், எவ்வளவு பெரிய பணிச்சுமையிலும் காமடியான scene பார்க்கும் போது நம்மை மறந்து சிரித்து விடுகிறோம், துக்கத்திலும் ஒரு கட்டத்தில் பசித்துவிடுகிறது , எவ்வளவு பெரிய ஏமாற்றத்திலும் அவ்வளவு ருசியாக சமைத்து விடுகிறோம், தெரிந்தோ தெரியாமலோ சிலரது எழுத்துகளை நேசித்து விடுகிறோம், இழப்பின் பின் ஒவ்வொரு album ஆக தட்டிப்பார்த்து புகைப்படங்களை ரசித்துவிடுகிறோம், stress ஆக இருக்கு படத்திற்கு போவமா என்று சென்றுவிடுகிறோம். இப்படி நம் வேதனைகளும் தோல்விகளிலும் நம்மை உற்சாகப்படுத்தி வைத்துக் கொள்வதில் இந்த கலைகளுக்கு அவ்வளவு பிரியம். அதனை இந்த உலகம் தெரிந்தோ தெரியாமலோ ஏற்றுக் கொள்கிறது.

உன் கலைகளை வளர்த்துக் கொள். பாடு ஆடு ஓடு எழுது, பேசு, இந்த வானின் எல்லை வரை போ, நன்றாக தேடு. இது தான் முடிவு என்று யாராவது சொன்னால் நம்பாதே. இதை விட இனி வேறு option இல்லை என்று பக்கத்தில் இருப்பவன் உன்னை பயமுறுத்தினால் அப்படியே என்று கேட்டு நக்கலாக சிரித்துவிடு. எல்லாம் முடிஞ்சு போச்சு, நீ காலி என்று சொன்னால் என்ன முடிஞ்சு போச்சு என்று கேள். இனி ஜெயிக்க வாய்ப்பே இல்லை நீ தோத்து போயிட்டாய் என்று சொன்னால் எங்கே இதோட முடிவு என இருக்கும் எல்லையை காமி என்று கேள். எதிர்மறைகளை உன்னுள் ஊடுருவச் செய்யும் எந்த கேள்வியாக இருந்தாலும் அவர்களிடம் மீண்டும் திருப்பி அனுப்பு. உன்னை சாந்தப்படுத்தும் ஆசுவாசப்படுத்தும் நிரந்தர சந்தோசப்படுத்தும் அனைத்தும் கலை தான். உனக்குள் உறங்கிக் கிடப்பதை உனக்காக என்றும் விழித்து வைத்துக் கொள்.

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இன்னுமொரு தேத்தண்ணி...



நான் இன்னும் வாறனென்று சொல்லேல்ல" "வேண்டாமென்றா போகாமல் நிக்கவோ போறீர்" கோப்பையில் போட்ட சீனிக்கு நல்ல அடி விழுந்தது. "என்னவோ செய்யும்" "நாலு நாள் தான்" சத்தியமாகெஞ்சவில்லை."டக்கென்று வந்திடுவன்" "போய் தொலையும்" தேத்தண்ணி கோப்பை கையில் வந்தது. "நீங்களும் உங்க ஜொனியன்ஸ/ம்... this is too much" "தேத்தண்ணி சூப்பராயிருக்கு" உண்மையிலேயே திறமாகத் தான் இருந்தது. இன்னுமொரு தேத்தண்ணி கேட்கலாம் போல! ■

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சூரியன் அழிந்துவிட்டால் நமக்கு 8 நிமிடங்களுக்குப்...

அந்தப் பொருளில்பட்டுத்தெறித்து வரும் ஒளி நமது கண்களை வந்தடைய, ஒளியின் வேகத்தின் காரணத்தால், ஒரு குறிப்பிட்ட நேரம்எடுக்கும். எனவே நான் ஆரம்பத்தில் கூறியது போல், நிகழ்காலத்தில் நாம் வாழ்ந்தாலும் நமது கண்களால் எப்போதுமே இறந்தகாலத்தை மட்டும் தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம்! இது மறுக்கமுடியாத ஒரு அறிவியல் உண்மை ஆகும்.

ஆக மொத்தத்தில், நிகழ்காலத்தையே நம்மால் ஒழுங்காகப் பார்க்கமுடியவில்லை, அதற்குள் விஞ்ஞானிகள் இறந்தகாலத்திற்கு அல்லது எதிர்காலத்திற்கு எப்படிப் பயணிப்பது என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். சிந்தித்துப்பார்த்தால் நகைச்சுவையாக இல்லையா? ■




தோற்றம்: 07.02.1956
மறைவு: 02.06.2022

கண்ணின் மணி போல்
எம்மை காத்து
அன்புடன் எம்மை அரவணைத்து
இன்பமுடன் நாம் வாழ
வழி அமைத்த
அழியா நிலை பெற்ற
நம் திரு உருவே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம்வல்ல இறைவனிடம்
பிரார்த்திக்கிறோம்.

# நன்றி நவிலல்

## நாட்டுப்பற்றாளர் அமரர் தனம்ஜெயசிங்கம்.பரராஜசேகரன்

தோற்றம்: 07.02.1956 | மறைவு: 02.06.2022

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி முகநூல் மின்னஞ்சல் ஆகியவை மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கும் நினைவு மலரில் உரை எழுதியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்: மனைவி மகள் மருமகன் சகோதரர் (யேர்மனி)

# விஜய்க்கு வில்லியாகும் சமந்தா?



நடிகர் விஜய் தற்போது வம்சி இயக்கத்தில் தனது 66-வது திரைப்படமாக உருவாகி வரும் வாரிசு படத்தில் நடித்து வருகிறார். இதன் பிறகு விஜய்யின் 67 வது படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க இருப்பதாக ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது.

இந்த படத்தின் முதற்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த படம் கைதி பட பாணியில் உருவாகவுள்ளதாக கூறப்படுகிறது. இதில் தெறி, மெர்சல், கத்தி போன்ற படங்களில் விஜய்க்கு ஜோடியாக நடித்த நடிகை சமந்தா நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இப்படத்தில் சமந்தா வில்லியாக நடிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# ரெட் ஹாட் குயினாக ரம்யா பாண்டியன்



பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் என்ற படத்தில் நடித்த ரம்யா பாண்டியன், தற்போது இடும்பன்காரி என்ற படத்தில் நடித்து வருகிறார். இது தவிர ஒரு மலையாள படமும் அவர் கைவசம் உள்ளது.

தொடர்ந்து தனது கவர்ச்சிகரமான புகைப்படங்கள் வீடியோக்களை வெளியிடுவதில் தீவிரம் காட்டி வரும் ரம்யா பாண்டியன், சில தினங்களுக்கு முன்பு மூன் லைட்டில் போட்டோஷூட் நடத்தி அந்த புகைப்படங்களை வெளியிட்டு இருந்தார். இந்த நிலையில் தற்போது சிகப்பு நிற உடை அணிந்து தான் எடுத்துக்கொண்ட கிளாமரான வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளார் .

அதன் பின்னணியில் ஒரு ஆங்கில பாடலும் ஒலிக்கிறது. இப்படி ரம்யா பாண்டியன் வெளியிட்டுள்ள அதிரடியான கவர்ச்சி வீடியோவுக்கு இளவட்ட ரசிகர்கள் லைக்ஸ் கமெண்ட்ஸ் என்று அமோகமான வரவேற்பை கொடுத்து வருகிறார்கள்.

# தள்ளிப்போகும் விக்ரமின் 'கோப்ரா'

நடிகர் விக்ரம் ஏகப்பட்ட வேடங்களில் நடித்து முடித்துள்ள படம் 'கோப்ரா' 'இமைக்கா நொடிகள்' படத்தை இயக்கிய அஜய் ஞானமுத்து இயக்கியுள்ள இப்படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக ஸ்ரீநிதி ஷெட்டியும், வில்லனாக கிரிக்கெட் வீரர் இர்பான் பதானும் நடித்துள்ளனர்.

செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் தயாரித்து வரும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.



இந்த படத்தின் பெரும்பாலான காட்சிகள் ரஷ்யாவில் படமாக்கப்பட்டுள்ளது. அதோடு விக்ரம் பல வேடங்களில் நடித்துள்ளதால் படத்திற்கான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகமாக உள்ளது.

இப்படம் ஆகஸ்ட் 11 ஆம் திகதி வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது இப்படத்தில் கிராபிக்ஸ் அதிகமாக இருப்பதால் திட்டமிட்டபடி பணிகள் முடியவில்லையாம். எனவே இப்படம் சொன்னபடி வெளியீட்டு திகதியில் வெளியாக வாய்ப்பில்லை என கூறப்படுகிறது.

# சிவகார்த்திகேயனின் மாவீரன் படத்தில் கவுண்டமணி



தமிழ் சினிமாவில் சின்ன சின்ன வேடங்களாக நடிக்க தொடங்கி, பாரதிராஜா இயக்கிய 16 வயதினிலே படத்தில் ரஜினியின் நண்பராக நடித்து ரசிகர்களின் கவனத்திற்கு வந்தார் கவுண்டமணி. அப்படி நடிக்க தொடங்கியவர் ஒரு கட்டத்தில் செந்தில் உடன் காமெடி கூட்டணி அமைத்து ஏராளமான படங்களில் நடித்தார்.

கவுண்டமணி -செந்தில் காமெடி இல்லாத படங்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு 1980க்கு பிறகு 2000 வரை அதிகமான படங்களில் நடித்து வந்தார் கவுண்டமணி. இரண்டாயிரத்து பிறகு அவருக்கான பட வாய்ப்புகள் குறைந்த போதும் அவ்வப்போது ஒரு படத்தில் நடித்துக் கொண்டு வந்தார். கடைசியாக 2016 ல் வாய்மை என்ற படத்தில் நடித்திருந்தார் கவுண்டமணி. அதன் பிறகு கடந்த சில ஆண்டுகளாக அவர் ஓய்வில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில் தற்போது மடோன் அஸ்வின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் மாவீரன் படத்தில் மீண்டும் கவுண்டமணி நடிப்பதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த படத்தில் அவர் சிவகார்த்திகேயனின் பெரியப்பாவாக ஒரு காமெடி கலந்த குணச்சித்திர வேடத்தில் நடிக்கிறாராம். இப்படத்தில் கவுண்டமணி நடிக்க வேண்டும் என்பதற்காக அவரை நேரில் சென்று சந்தித்து அழைப்பு விடுத்திருக்கிறார் சிவகார்த்திகேயன். மாவீரன் படத்தில் கவுண்டமணி நடிப்பது குறித்த தகவல் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என்று கூறப்படுகிறது.







Jasmine Silk House
ஆடைகளின் ராணி
100 € பட்டுச்சேலை 30 € மட்டுமே!
இது இப்படி என்றால்
நேரில் வாருங்கள் யாவும்
அதிரடி கழிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
கேர்வலார் தேவாலய திருப்பூசை 13.08.2022 சனிக்கிழமை அன்று ஆலய வளாகத்தில் எமது அதிரடி மலிவு விற்பனை!
திருமண பட்டுப்புடவைகள் புத்தம் புதிய டிசைன்களில்
மங்கையர் மனங்கவரும் சேலைகள்
சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், குர்த்தாக்கள்,
இன்னும் இமிடேஷன் நகைகள் அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria
VALUTRANS
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
கேர்வலார் தேவாலய திருப்பூசை 13.08.2022 சனிக்கிழமை அன்று ஆலய வளாகத்தில் எமது மாபெரும் மலிவு விற்பனை!
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிடேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
SALE
Ludwig str.87a
70197
Stuttgart
Tel: 0711 615 8976/ 0170 334 4059


Jeysas Logistics
பார்சல் சேவைகள்
(PARCEL SERVICES)
நாங்கள் வழங்கும் சேவைகள்:
சென்னையில் மிகக் குறைந்த விலையில் விரைவு அஞ்சல் (Courier) சேவைகளை வழங்குகிறோம்
உங்கள் பொதிகள் (Parcel) விரைவாகவும், மிகக்குறைந்த விலையிலும்,சென்னையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம்
நாங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வரி செலுத்திய ஏற்றுமதிகளை வழங்குகிறோம்
8-12 நாட்களுக்குள் விரைவு அஞ்சல் (Parcel Delivery)
சலுகை 25% வரை
சென்னையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு
JEYSAS
Headquarters
Jeysas Logistics LTD
Gewerbestrasse 5, 6330 Cham, Switzerland
+41 79 228 01 72
+41 41 260 14 06
info@jeysas.com
in.maa@jeysas.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!!! புதிய பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698